Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 08 திங்கட்கிழமை (24.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 055

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.



# எத்தகைய சதிகளையும் முறியடிப்பதற்குத் தயார்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் எத்தகைய சதிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றை தோற்கடிக்கத் தயாரென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுதந்திரமான தாய் நாட்டை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

மிகிந்தலை ரஜரட்ட பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் கதவுகள் சலூன் கடை கதவுகளை போன்றது. எவரும் வரலாம், எவரும் போகலாம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து சென்றவர்கள் மீண்டும் கட்சிக்கு திரும்பினர். ஆனால் நாம் அவர்களுக்கு எதுவும் செய்யவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் அரசாங்கத்திலும் சுதந்திரம்

19 ஆம் பக்கம் பார்க்க

# மைத்திரிபாலவின் வெற்றி தனிநபரின் வெற்றியல்ல

## மாதுலுவாவே சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது அபேட்சகர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி ஒரு தனி நபரின் வெற்றியல்ல. அது இந்நாட்டின் மீது ஆதரவு வைத்து உருவாக்கவுள்ள கொள்கைக்கு கிடைக்கும் வெற்றியாகும் என கோட்டை ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் குறிப்பிட்டார்.

பொது அபேட்சகர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலர் கோட்டை ஸ்ரீ நாக விகாரைக்கு விஜயம் மேற்கொண்டு அதன் விகாராதிபதி சோபித தேரரை சந்தித்து நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க

# நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு அரசுக்கு ஆதரவளிக்கத் தயார்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் உண்மையான தேவை அரசாங்கத்திற்கு இருக்குமாயின் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று தெரிவித்துள்ளார்.

குருணாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வாக்காளர்கள் வாக்களிப்பதை தடுத்து பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டே



மகிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினார். பின்னர் யுத்தத்தை காரணம்காட்டி தமது அதிகாரங்களை அதிகரித்துக்கொள்ள ஆரம்பித்தார். யுத்தத்திற்கு பின்னர் அவற்றை மீளப்பெறுவதாக கூறினார். யுத்தத்திற்கு பின்னர் என்ன செய்தார். தமக்கு எதிராக போட்டியிட்ட சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தார். ஊடக சுதந்திரத்தை இல்லாதொழித்தார். பிரதம நீதியரசரை

19 ஆம் பக்கம் பார்க்க

# தேர்தல் விஞ்ஞாபனத்தின் பின்பே யாருக்கு ஆதரவென தீர்மானம்

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விஞ்ஞாபனங்கள் வேட்பாளர்களினால் வெளியிடப்பட்டதன் பின்னரே எவருக்கு ஆதரவை வழங்குவது என்பது குறித்து தீர்மானிக்கப்படுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது

19 ஆம் பக்கம் பார்க்க

# 14 இந்திய மீனவர்கள் நெடுந்தீவு கடலில் கைது



(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரம், ஜெகதாப்பட்டிணம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் 14 பேரையும் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# பாப்பரசரின் இலங்கை விஜயம் திட்டமிட்டபடி இடம்பெறும்

## கத்தோலிக்க திருச்சபை அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் புனித பாப்பரசர் முதலாவது பிரான்ஸிசின் நாட்டுக்கான விஜயத்தில் எந்த மாற்றங்களும் இல்லை என இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

திருத்தந்தை பிரான்ஸிஸ் எதிரவரும் ஜனவரி 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணம் திட்டமிட்டபடி நடக்கும் என்றும் கத்தோலிக்க திருச்சபை கூறியுள்ளது.

நாட்டில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் காலப் பகுதியில் நாட்டில் அமைதியான சூழலை பேணுமாறு சகல தரப்பினரிடமும் கோரிக்கை விடுப்பதாக கத்தோலிக்க திருச்சபையின்

19 ஆம் பக்கம் பார்க்க

# வலி. தென்மேற்கு தவிசாளர் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)



வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் சண்முகம் சிவகுமார் நேற்றுக் காலை காலமானார். நெஞ்சுவலி காரணமாக கடந்த சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாக்குகளின் அடிப்படையில் உபதவிசாளராக இருந்த இவர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் தவிசாளர் ஜெபநேசன் பதவி விலகியமையைத் தொடர்ந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் ஏற்பு

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தலில் தபால் வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்குமாறு மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யூ.அமரதாச தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க



# மழையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல்



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பம் ஒன்று வீடு இல்லாமல் இடிபாடுள்ள வீட்டில் வாழ்ந்து வருகின்றது.

போரால் முற்றாக சேதமுற்ற அவ் வீட்டில் அக்குடும்பத்தினர் வசித்துவரும் நிலையில், மழையால் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

அப்பிரதேசத்து நிலைமைகளை நேரில் பார்வையிடச் சென்ற ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டார்.

# நெல்லியடி, அச்சுவேலிப் பகுதிகளில் இடி, மின்னல் தாக்கம்

(நெல்லியடி)

நெல்லியடி, அச்சுவேலிப் பகுதியில் இடி, மின்னல் தாக்கத்தால் பயன்தரு மரங்கள் மற்றும் மின்சார சாதனங்கள் அழிவடைந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார்.

750 வீதிக்கு அருகாமையில் உள்ள வீட்டில் இருந்த தென்னை மரத்தில் இடி விழுந்து தென்னைமரம் அழிந்துள்ளது. அத்துடன் பப்பாசி மரம் இரண்டு துண்டுகளாக அறுக்கப்பட்டு காணப்படுகிறது.

நெல்லியடி 750 வீதிக்கு அருகில் உள்ள இந்த வீட்டில் உள்ள சகல மின்குமிழ்களும் உடைந்து சிதறிக் காணப்படுகின்றன.



இதேவேளை இராசவீதி தோப்பு அச்சுவேலியில் வசிக்கும் துரைசிங்கம் விஜயசிங்கம் என்பவரின் வீட்டில் மின்னல் தாக்கி ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவரின் மகளுக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து தோப்பில் வாடகை வீட்டில் வசித்துவரும் குடும்பத்தினரே மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (85,18)

# இருவருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தும் நேற்று இருவர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனாவைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் கடந்த மாதம் டெங்கு நோய்த்தாக்கத்திற்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 133 ஆக அதிகரித்துள்ளது.

தற்சமயம் யாழ்.மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக இந்த வருடத்தில் இந்த மாதமே அதிகளவானோர் டெங்குத்தொற்றிற்கு இலக்காகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(நெல்லியடி)

அரச ஊழியர்களுக்கென அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வலிகாமம் வலயத்திலுள்ள தெல்லிப்பளை கோட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என கொடுப்பனவு கிடைக்காத ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் சகல அரச ஊழியர்களுக்கும் இத்தொகை நவம்பர் மாத சம்பளத்துடன் வழங்கப்பட்ட நிலையில் தெல்லிப்பளை கோட்ட ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் வழங்கப்படவில்லை என ஆசிரியர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (17)

# மாணவர்களுக்கு அனுமதிப்பரீட்சை

(நெல்லியடி)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் தரம் 6 இற்கு மாணவர்களை இணைக்கும் வகையில் அனுமதிப்பரீட்சையொன்று நேற்று பாடசாலையில் நடத்தப்பட்டது.

இப்பரீட்சையில் 94 மாணவர்கள் கலந்துகொண்டு பரீட்சைக்கு தோற்றியுள்ளதுடன், பரீட்சைப் புள்ளிகள் ஓரிரு தினங்களில் வெளியிடப்படும் எனவும், மாணவர்கள் பெற்ற புள்ளியை அடிப்படையாகக் கொண்டே அனுமதி வழங்கப்படும் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (17)

# பரிசளிப்பு விழா

(யாழ்.நிருபர்)

'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதைப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

'நீங்களும் எழுதலாம் கவிதை, சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை வலயக் கல்விப்பணிப்பாளர் என்.விஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஆ.ஜெகசோதி, தி.திருச்செந்தில்நாதன், திருகோணமலை மாவட்ட வர்த்தக, கைத்தொழில் சம்மேளனத்தலைவர் வ.கலைச்செல்வன் மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (10)

சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக்

நீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக். பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி யாழ்ப்பாணம்.

(இலுப்பையடி சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088.

(C/3800)

# கிளிநொச்சியில் தமிழ்விழா

(யாழ்.நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 16,17,18 ஆம் திகதிகளில் தமிழ் விழாவையும், திருக்குறள் மாநாட்டையும் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

ஜனவரி 16 ஆம் திகதி ஆரம்ப நிகழ்வாக பண்பாட்டு ஊர்வலமும், அதனைத் தொடர்ந்து திருக்குறள் நூல் ஓவியக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது.

மறுநாள் 17 ஆம் திகதி தமிழ் விழா கருத்தரங்கும், கலைநிகழ்வுகளும் இடம்பெறும். 18 ஆம் திகதி திருக்குறள் கருத்தரங்கு, திருவள்ளுவர் விழா, பரிசில் வழங்கும் நிகழ்வு என்பன இடம்பெறும்.

இவ்இருநிகழ்வுகளும் சிறப்புற நடைபெறுவதற்கு அன்பர்களிடமிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தலைவர் வே. இறைபிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு காங்கேசன்துறை II ஆவது பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் மாதாந்த பரிசீலனை செய்யப்பட்டது. இதில் பொலிஸாரின் அணிவகுப்பு இடம்பெறுவதைக் காணலாம். (18)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2583 திகதி 22-11-2014

ஆங்கில எழுத்து: U

வெற்றி எண்கள் 15 22 23 48

போனஸ் இல: 02

ஜக்பொட் பரிசு ரூ. 19,581,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 199120 | 20/- | 3,982,400/- |
| 2 இல | 14336 | 100/- | 1,433,600/- |
| 3 இல | 310 | 1,000/- | 310,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8022 | 40/- | 320,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 566 | 1,000/- | 566,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 19,581,750/- | |
| 1 இல + போனஸ் இல | 9478 | 100/- | 947,800/- |
| 2 இல + போனஸ் இல | 457 | 500/- | 228,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 395 | 200/- | 79,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 232718 | | 8,406,680/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 20,125,725/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3587)

உடுப்பிட்டி வடக்கிற்கு

# தேசிய நீர்வழங்கல் வடி.சபை குழாய் மூலம் நீர் வழங்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி வடக்கு நாவலடி - ஊரிக்காடு கிராமத்திற்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்க யாழ். தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை முன்வரவேண்டும்.

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட பிரதேசமாக நாவலடி - ஊரிக்காடு கிராமம் உள்ளது. இங்குள்ள 84 குடும்பங்கள் நீண்ட தூரம் பயணித்தே குடிநீரை பெறும் அவலநிலையில் உள்ளதாக அப்பகுதி உடுப்பிட்டி ஊரிக்காடு பிரதேச முன்னேற்ற சங்க தலைவர் இரா.செல்வரத்தினம் கவலை தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயமாக செல்வரத்தினம் மேலும் தெரிவிக்கையில்,

ஊரிக்காடு - நாவலடி, கொம்மாந்துறை, கம்பர்மலை ஆகிய பிரதேசங்களில் சுத்தமான நன்னீர் குடிதண்ணீர் கிடையாது,

முதற்கட்டமாக தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலயமருகில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் தாங்கியில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீரை ஊரிக்காடு - நாவலடி பிரதேசத்திற்கு (நெற்கொழு விளையாட்டு மைதானம் முன்பாக உள்ள வீதி) வழங்குமாறு கோரி பல கடிதங்களை சமர்ப்பித்தோம்.

எமது பிரதேசத்திற்கு குடிநீர் வழங்குமாறு கோரி இதுவரை 10 இற்கும் மேற்பட்ட கடிதத்தை வழங்கியுள்ளோம்.

அத்துடன் பருத்தித்துறை பிரதேச செயலரின் கவனத்திற்கும் இது விடயத்தைக் கொண்டு வந்துள்ளோம்.

எனவே காலம் தாழ்த்தாது உடுப்பிட்டி வடக்கு ஊரிக்காடு - நாவலடி கிராமத்திற்கு குழாய் மூலம் குடிதண்ணீரை முதற்கட்டமாக வழங்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

# கட்டண மாற்றம்

அச்சுவேலி வைத்தியசாலையில் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு கட்டணம் தற்பொழுது புதிய முறையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக நோயாளர் நலன் புரிச் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி துவிச்சக்கர வண்டிக்கு ஐந்து ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு பத்து ரூபாவும், பூட்டில்லாத சைக்கிளுக்கு 10 ரூபாவும் முச்சக்கர வண்டிக்கு இருபது ரூபாவும் அறவிடப்படுகின்றது.

மேலும் வாகன உரிமையாளர்கள் தமது உடைமைகளை வாகனங்களில் வைக்காது தம்முடனே எடுத்துச் செல்லுமாறும் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர் - 03



பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மாணவர் ஒன்றியத்துக்கும் பல்கலைக்கழகங்களில் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறியவர்களுக்கும் இன்னும் சில கேள்விகள் –

1. தேர்தல் காலத்தில் அறிக்கை விடுவதும் நவம்பர் 27 ஆம் திகதி விளக்கேற்றுவதும்தான் உங்கள் தேசியக் கடமையா?

2. அரசாங்கத்தை எப்போதும் எதிர்த்துக் கொண்டிருப்பதுதான் தேசியப் பற்றுக்கு அடையாளமா?

3. இந்த அரச எதிர்ப்பின் மூலமாக நீங்கள் சாதித்தது என்ன? இனிச் சாதிக்கப்போவது என்ன?

4. இவ்வாறு அரச எதிர்ப்பைக் கொண்டிருக்கின்ற நீங்கள் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறிய பிறகு எதற்காக அரச உத்தியோகத்துக்காக காத்துக்கிடக்கிறீங்கள்? ஒரு காலம் சிங்களம் படிக்க வேண்டும் என்பதற்காக உங்கள் பாட்டன்மார் தங்கள் உத்தியோகத்தையே விட்டுத்தள்ளிப்போட்டு வந்து ஊரில் சொந்த வேலைகளைச் செய்ததை நீங்கள் அறியவில்லையா? அதைப்போல மானத்தோடும் கௌரவத்தோடும் அரச உத்தியோகத்தை புறந்தள்ளுவதற்கு ஏன் உங்களால் முடிவதில்லை?

5. இனவாத அரசின் ஒடுக்குமுறையை எதிர்த்தும் ஊடக சுதந்திரத்தைக் கோரி யும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் இதுவரையில் நீங்கள் மேற்கொண்ட போராட்டங்கள் என்ன? மாணவர் சக்திக்கு நிகராக வேறு எந்தச் சக்தியும் இல்லை என்பதை நீங்கள் அறியவில்லையா?

6. உங்களைப்போல இருக்கிற பிற சமூகங்களின் மாணவர்களையும் அரசாங்கத்தின் அடக்குமுறை – ஒடுக்குமுறைக்கு எதிராகத்திரட்டுவதற்கு நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள்?

7. படையினர் வசமுள்ள காணிகளை மீட்பதற்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் என்ன?

8. சிறைக்கைதிகளின் விடுதலைக்காக நீங்கள் ஆற்றிய பங்கு என்ன?

9. தமிழ் ஊடகங்களை ஜனநாயக மயப்படுத்துவதற்கு நீங்கள் எத்தகைய பாத்திரத்தை வகித்திருக்கிறீங்கள்? பிற ஊடகங்களின் இனவாதத்தை எதிர்பதற்கான உங்கள் முயற்சிகள் என்னமாதிரியானவை?

10. போரிலே தாய்தந்தையரை இழந்த பிள்ளைகளில் எத்தனைபேருடைய கல்விக்காக இதுவரையில் உதவி வருகிறீர்கள்? அவர்களில் எத்தனை பேருடைய விவரங்கள் உங்களிடம் உள்ளன? அப்படி இருந்தால் நாளையே அவற்றைப் பற்றி பகிரங்கமாக அறிக்கையிடுவீர்களா? (இனிமேல் இதையெல்லாம் திரட்டிப் பூச்சாண்டி காட்ட வேண்டாம்).

11. வடக்குக் கிழக்கு இணைப்பிற்கு நீங்கள் எத்தகைய முயற்சிகளை எடுத்திருக்கிறீர்கள்?

12. முஸ்லிம் – தமிழ் – மலையக மக்களுக்கிடையிலான உறவுக்கு – அந்த உறவை மீண்டும் கட்டியெழுப்ப நீங்கள் ஆற்றிவரும் பங்கும் செய்யும் வேலைகளும் என்ன? இதையெல்லாம் வெளியே சொல்லமாட்டோம் என்று அடம்பிடிக்க மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

13. இனப்பிரச்சினைக்கான தீர்வைக்குறித்த மாணவர்களின் நிலைப்பாடு என்ன?

14. தேசியம் என்றால் என்ன என்பதைக் குறித்து உங்களுக்கு உள்ள புரிதல் என்ன?

15. தமிழீழம் நிச்சயம் கிடைக்கும் என்று இன்னும் நம்புகிறீர்களா? அப்படியென்றால் அது எப்படிக் கிடைக்கும்? அதைப் பெறுவதற்கு நீங்கள் எப்படியெல்லாம் பங்களிப்புச் செய்கிறீர்கள்?

16. சர்வதேச சமூகத்தின் மூலமாக இனப்பிரச்சினை தீரும் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? மறுக்கிறீர்களா? அல்லது அப்படி நம்புகிறீர்களா?

17. அப்படிச் சர்வதேச சமூகத்தின் மூலமாக – வெளிச்சக்திகளின் மூலமாக இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டுமாக இருந்தால் அது எப்படி, எப்பொழுது கிட்டும்? அதை அடைவதற்கான வழிகள் என்ன?

18. ஒவ்வொரு தேர்தலின்போதும் உருவேறியவர்களைப்போல – போர்க்காலத்தில் சண்டைவாகனங்கள் ஓடித்திரிவதைப்போல தேர்தல் வாகனங்களில் இரண்டு மூன்று நாட்களுக்கு மட்டும் தேர்தற்பணி செய்தால் விடுதலை கிட்டுமா? இனப்பிரச்சினை தீர்ந்து விடுமா?

19. இதுவரையான ஆயுதப்போராட்டம், ஆயுதமற்ற அரசியற் போராட்டங்கள் எல்லாவற்றைப்பற்றியும் உங்களுக்குத் தெரியுமா? அவற்றை முழுமையாக அறிந்திருக்கிறீர்களா? இந்தப்போராட்டங்கள் எல்லாம் எப்படித் தோற்றன என்று தெரி யுமா?

20. இதுவரையிலும் போராட்டங்களில் உயிரைக் கொடுத்தோரைப்பற்றி, அவர்களுடைய தியாகங்களைப் பற்றியெல்லாம் மதிப்பாக நினைக்கிற நீங்கள், அப்படித் தியாகம் செய்தவர்களுடைய நினைவுகளைப் பற்றி எங்காவது பதிவுகளைச் செய்ய முன்வந்திருக்கிறீங்களா? அந்த நினைவுகளை நீங்கள் பாதுகாத்ததைப்பற்றியும் பதிவு செய்ததைப்பற்றியும் சொல்லுங்கள்?

21. சர்வதேச மாணவர்களுடன் – பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல இன, மத மாணர்வர்களுடன் இலங்கை நிலவரத்தைப் பற்றியும் இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றியும் இதுவரையில் பேசியிருக்கிறீர்களா?

22. சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களுடைய – தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினையைப் பற்றிச் சொல்லியிருக்கிறியளா?

23. ஒரு நாளாவது உண்மையாக இந்த மக்களைக் குறித்துச் சிந்திச்சிருக்கிறியளா? அப்படியென்றால், எப்படி இத்தனை காலமும் நீங்கள் படிப்பும் பம்பலுமாக இருக்கிறீங்கள்? போதாக்குறைக்கு தேர்தல் முசுப்பாத்தியில் ஈடுபடுகிறீங்கள்?

24. எத்தனை பெரிய போராட்டங்களும் தியாகங்களுமாக இருந்த சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளாக இருக்கிறீங்களா?

# புத்துயிர் பெறும் வயல்கள் மகிழ்ச்சியில் விவசாயிகள்



(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் விதைப்பிற்குள்ளாகிய நெல்வயல்கள் தற்சமயம் பெய்த மழைகாரணமாக நீர்நிறைந்து பயிர்கள் நல்ல நிலையில் வருவதால் விவசாயிகள் மகிழ்சியடைந்துள்ளனர்.

ஏற்கனவே விதைப்பிற்குள்ளாகியிருந்த இந்த வயல் நிலங்களில் மழை இல்லாத காரணத்தினால் பயிர்கள் மஞ்சள் நிறமாகி கருகியிருந்த நிலையில் தற்சமயம் மழைபெய்து வருவதை அடுத்து நெற்பயிருக்கு விவசாயிகள் உரம் இட்டு கிருமி நாசினி விசிறிவருகின்றனர். (பா)

# விசேட செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை கட்டடங்கள் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையால் அறிவினை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வியினை புனரமைத்தல் செயற்றிட்டத்தின் (TSEP) கீழ் மன்னாரில் இரு பாடசாலைக் கட்டடங்களும், வடமாகாண கல்வி அமைச்சின் நிர்வாகக் கட்டடமும் கட்டப்படவுள்ளன.

மன்னார் நொச்சிக்குளம் கிஜிரா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 5.55 மில்லியன் ரூபா செலவில் வகுப்பறைக் கட்டடமும், மன்னார் பன்னவெட்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 6.41 மில்லியன் ரூபா செலவில் வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள வடமாகாண கல்வி அமைச்சில் 17.12 மில்லியன் ரூபா செலவில் நிர்வாகக் கட்டடமும் அமைக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் இந்த செயற்றிட்டத்திற்கான விலைக் கேள்வியினை வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு கோரியுள்ளது.

சர்வதேச அபிவிருத்திச் சங்கம், அவுஸ்ரேலிய உதவி நிறுவனங்கள் இணைந்து அறிவினை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வியினை புனரமைத்தல் செயற்றிட்டத்திற்கு (TSEP) கடன் வழங்கும் திட்டமொன்றை செயற்படுத்துகின்றன. (90)

முதலில் நல்ல வேலைக்காரனாக இருக்க கற்றுக்கொள்: பின் எஜமானனாகும் தகுதி உனக்கு வந்துவிடும்.
-சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## புதிய திறப்புகளுக்கு இட்மளித்தல்!

இந்த அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் சொல்வதையெலலாம் நம்பவும் புதிதாக ஏதோ நடந்துவிடப் போகிறது என்று தொடர்ந்து காத்திருக்கவும், நம்மிடமுள்ள மறதிக்குணம் எப்படியெல்லாம் நமக்குப் பேருதவியாக இருக்கிறது என்பது நமக்குத் தெரிகிறது.

மக்களிடமுள்ள இந்த மறதியை நம்பியே அவர்களின் அரசியல் வண்டியும் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதும் தெரிந்ததுதான். நமது மறதியை மேலும் அதிகப்படுத்திக் கொள்ள இன்றைய வளர்ச்சிச் சூழல், புதிய கருவிகளின் கண்டுபிடிப்புகள், வாழ்க்கைமுறை மாற்றம் எல்லாம் மேலும் உதவி வருகிறது.

பழைய பாடல்கள், வாய்ப்பாடுகள், அகராதிப் பொருட்கள், விஞ்ஞான அட்டவணைகள் எல்லாவற்றையும் பாடமாக்கியே கல்வி கற்கும் நிலைமை இதோ சமீப காலத்தில் கூட இதற்கு முந்திய தலைமுறையினரிடம் இருந்தது.

இன்று எதையும் மனனம் செய்ய வேண்டிய அவசியமில்லை. கற்றவர் என்பவர் எல்லாவற்றையும் தன் மூளைக்குள் ஏற்றிக் கொண்டவர் அல்ல; அது இன்று தேவையுமில்லை.

எல்லாவற்றையும் நீங்கள் உங்கள் சட்டைப் பைக்குள் வைத்துத் திரிய இயலும். ஒரு பொத்தானை அழுத்தினால் சங்க இலக்கியங்களிலிருந்து ஜெயமோகன் படைப்புகள் வரை உங்கள் பார்வைக்கு வந்துவிடும்.

செல்போன்களிலேயே சில நொடிகளுக்குள் சகல தகவல்களையும் பெற்றுக்கொண்டுவிட முடிகிறது. உலகின் எந்தப் பிரச்சினை குறித்தும் ஒரு சில நிமிடங்களில் ஆயிரமாயிரம் தரவுகளை உங்களுக்கு அள்ளித்தர கூகிள் தேவதை காத்திருக்கிறாள்.

இந்தப் புதிய தேடல் அறிதல் வசதிகளை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்வது, அந்தக் கருவிகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதை அறிந்திருப்பதே இன்றைய அறிவாக மாறிவிட்டது. அவ்வாறு பயன்படுத்தத் தெரிந்தவர்கள்தான் இன்று 'எல்லாம் தெரிந்தவர்கள்'.

இந்த மாற்றம் நமது கல்விமுறையிலும் மாற்றம் கொண்டுவர வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருக்கிறது. தகவல்களை மூளைக்குள் திணித்துப் பின்னர் அவைகளை ஞாபகப்படுத்தி விடைகளாக எழுதக் கோரும் பரீட்சை முறை மாறவேண்டியிருக்கிறது.

"எல்லாவற்றையும்போல அறிவு என்பதும் நிரந்தரமானதல்ல; எல்லாவற்றையும்போல அதுவும் மாறிக் கொண்டே உள்ளது; அதுவும் ஒப்பீட்டு ரீதியானதே, அதுவும் முற்றுப் பெற்றுவிடுவதில்லை என்கிற சிந்தனை இளம் உள்ளங்களில் பதிக்கப்படுவதற்கு வேறெப்போதைக் காட்டிலும் இப்போது வாய்ப்பு அதிகமாகியுள்ளது" என்கின்றனர் அறிஞர்கள்.

அதாவது, வியத்தகு பேருண்மைகள் கண்டுபிடிப்புகள் எல்லாம் முந்தைய நம்பிக்கைகள் மற்றும் பற்றுக்களிலிருந்து விடுபடும் தருணங்களிலேயே வாய்த்துள்ளன என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

மேலிருந்து விழும் அப்பிள் கீழே விழுவது இயற்கைதானே என நியூட்டன் நினைத்திருந்தால் 'பூமியிடம் உள்ள ஈர்ப்பு' குறித்த கருத்தாக்கம் உருவாகியிருக்காது. பழைய நம்பிக்கைகளில் சுருண்டிருந்தால் பரிணாமத் தத்துவம் உருப்பெற்றிருக்காது.

அதுபோலத்தான் 'மாறாஎதிரிகளை' மனதுக்குள் வைத்திருந்தால் நம்மால் புதிய வாழ்வுக்கான தீர்வுகளைக் கண்டுகொள்ள முடியாது. மற்றவர்களுடன் இணங்கி வாழவேண்டிய யதார்த்தத்திற்கு முதலில் நம் மனங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளாமல் இங்கு புதிய திறப்புகள் உருவாகாது.

பழைய மனங்களை மாற்றுதல் அரிது. எனவே, இவற்றையெல்லாம் பள்ளிச்சிறார்களிடம் இருந்து தொடங்கி வரவேண்டும். முதலில் காலத்திற்கொவ்வாத பழஞ் சிந்தனைகளை உதறி எறிய வேண்டும். "கற்பித்தலை" "உரையாடலாக" மாற்றவேண்டும்.

ஆசிரியருக்கும் மாணவர்க்கும் இடையிலான தொலைவை இல்லாமலாக்க வேண்டும். பாடநூற்களின் ஆதிக்கம் குறைய சுய சிந்தனை கூடும் என்கிற அடிப்படையில் அவை வடிவமைக்கப்பட வேண்டும்.

- ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 2014

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை"

சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

# மாரீசன்கூடல் பாடசாலையில் கலாசார விழிப்புணர்வு வீதி நாடகம்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையில் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவு கலாசார விழிப்புணர்வு சம்பந்தமான வீதிநாடகத்தை காட்சிப்படுத்தி வருகின்றது.

இதில் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாரீசன்கூடல் பகுதியில் ஆற்றுகை ஒன்று இடம்பெற்றது.

மாரீசன்கூடல் ஜே/153 கிராம சேவையாளர் பிரிவில் மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலையில் இவ் ஆற்றுகை இடம்பெற்றது.

கல்விப்புலத்தின் வீழ்ச்சி, அதற்கான காரணங்கள், கலாசாரப் பிறழ்வுகள், பெற்றோர்களின் கடமைகள், இளம் சமூகம் வழி தவறும் விதம் சம்பந்தமாக இவ் வீதிநாடகம் அதிகளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் ஆற்றுகையினை, சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கலாசாரப் பேரவை வழங்கியது.

இவ் ஆற்றுகையினை தொடர்ச்சியாக பல இடங்களில் காட்சிப்படுத்தவேண்டுமெனவும் இதனூடாக கல்விப் புலத்தில் எழுச்சியையும் பண்பாட்டியலின் தடுமாற்றத்தை காக்க முடியும் எனவும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த பலர் தெரிவித்தனர்.

நிகழ்வின் இறுதியில் தெரிவு செய்யப்பட்ட கஷ்டத்தின் மத்தியிலும் கல்வியைத் தொடர்கின்ற சுமார் 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# ஜனாதிபதி முறைமையை மைத்திரி ஒழிப்பார்

## இது சம்பந்தனின் நம்பிக்கை

(கொழும்பு)

பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்ற பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை தீர்மானிக்கவில்லை. எனினும், பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பது குறித்து, தமிழ்க் கூட்டமைப்பு கூடி ஆராய்ந்து விரைவில் தனது தீர்மானத்தை அறிவிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்று தெரிவித்துள்ள சம்பந்தன், அரசியல் செயல்பாடு குறித்து தெரிவித்த கருத்துக்கள் தெளிவாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மைத்திரிபால சிறிசேனவை விரைவில் சந்திப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மைத்திரிபாலவை கூட்டமைப்பு இன்று சந்திக்க வாய்ப்பு இருப்பதாகவும் இதன்பின்னர் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதா இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பது குறித்து சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## கரையோர தனிமாவட்டம் படி இறங்கியுள்ளதா அரசு?

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ள கரையோர மாவட்டம் குறித்து அரச தரப்பு சாதக நிலைப்பாட்டில் பேச்சுக்களை முன்னெடுக்க இணக்கம் தெரிவித்துள்ளது. என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று நாடாளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.ஒருவரை சந்தித்துள்ள அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இதனைத் தெரிவித்துள்ளதுடன், மிகவிரைவில் இதுதொடர்பில் அமைச்சர் ஜோன் செனவிரட்னாவுடன் பேச்சு நடத்தப்படுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடாத்த முஸ்லிம் காங்கிரஸ் முயலுமெனவும் தெரியவருகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் தனது ராஜதந்திரத்தை இம்முறையாவது சரியாக பயன்படுத்துமா என்று அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் தீர்மானிக்கவில்லை என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

# நிலைமை கட்டுமீறிச்சென்றால் நாடாளுமன்றம் கலைக்கப்பட வாய்ப்பு?

(கொழும்பு)

தெற்கு அரசியல் நிலைவரம் கட்டுமீறி மோசமான நிலைமைக்குச் சென்றால் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடும் திட்டம் ஒன்றும் ஆளும் தரப்பிடம் இருப்பதாக தெற்கில் இருந்து கசியும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றை கலைப்பது குறித்து அரசாங்கம் இப்போது கவனம் செலுத்தி வருவதாகத் தெற்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாரியளவில் ஆளும் கட்சி உறுபபினர்கள் எதிர்க்கட்சிக்கு தாவினால், நாடாளுமன்றை கலைப்பதற்கு ஆளும் கட்சியின் முக்கிய தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றை கலைப்பதனால் ஏற்படக் கூடிய நன்மை, தீமைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆளும் கட்சியை விட்டு விலகும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்களை இல்லாமல் செய்யும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு நாடாளுமன்றை கலைக்க உத்தேசித்துள்ளது.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆர்.பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய போது, அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்தன நாடாளுமன்றை கலைத்திருந்தார்.


புதிய ஜனாதிபதி பிரேமதாச ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தக் கூடாது என்ற காரணத்தினால் இவ்வாறு நாடாளுமன்றை கலைத்திருந்தார் என சுட்டிக்காட்டப்படுகிறது

எனினும் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் வரையில் நாடாளுமன்றை கலைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நாங்கள் அடுத்தடுத்து இடம்பெயரேக்க கொத்துக் கொத்தா சாகக்குடுக்கேக்க எங்களோட நிக்காதவை தான் இப்ப எங்கட பிரதிநிதியள்... எங்கட எம். பிமார்ல ஒருவருமே கடைசிச் சண்ட மட்டும் நிக்கேல்ல.. மாகாண சபை உறுப்பினர்களிலயும் மிகச் சிலர் தான் வட்டுவாகல கடந்து வந்தவை. வலி தெரியாதவன் எல்லாம் வலியைச் சொல்லி வாக்குக் கேட்டு இப்ப வெள்ளையும் சொள்ளையுமா மாலையும் கழுத்துமா திரியுறான்.**

# வலி தெரியாதவரின் அரசியல்

**நந்தி முனி**



வன்னியப்புவின் உறவினர் ஒருவர் இறந்து போய்விட்டார். வன்னியப்பு சாவீட்டுக்குப் போனார். ஐயர் இன்னமும் வரவில்லை. சனங்கள் ஆங்காங்கே வெற்றிலை பாக்குத் தட்டத்தை சுற்றி யிருந்து வெற்றிலையோடு அரசியலை சப்பித் துப்பிக் கொண்டிருந்தார்கள்.

வன்னியப்பு இதில் எதிலும் இணைய விரும்பாது ஒதுங்கிப்போய் தனிய இருந்தார். ஆனாலும் பேப்பர் ரிப்போட்டர் அவரைக் கண்டுவிட்டார். கிளாக்கரும் கண்டு விட்டார். இருவரும் ஒரு வெற்றிலைத் தட்டத்தையும் தூக்கிக் கொண்டு அப்புவுக்கு அருகே வந்து குந்தினார்கள்.

**ரிப்போட்டர் :** என்னப்பு தனிய வந்து குந்திட்டீங்க

**அப்பு :** உதுகளுக்குள்ள போயிருந்தா வெத்திலையோட அரசியலையும் சப்பித் துப்ப வேண்டியது தான். அது தான் தனிய வந்து இருந்தனான். ஐஞ்சு வரியத்துக்கு முந்தி உயிர்கள குடுத்து செய்த அரசியல்.. இப்ப உப்பிடி வெறுவாய் சப்பிற விசயமாய் போச்சுது... அது தான் ஒண்டும் வேணாம் எண்டு போட்டு தனிய வந்து குந்தினான்.

**கிளாக்கர் :** உண்மை தான் அப்பு... எங்களால இப்ப கதைக்க மட்டும்தானே ஏலும். எலெக்சன் வந்தா வோட் போடுவம். பிறகு பேப்பர் பாப்பம், இணையம் பாப்பம். முகநூலில வீரம் பறக்க் மானம் பறக்க மோதுவம்... அவ்வளவும் தான்.

**ரிப்போட்டர் :** இல்ல இல்ல... இன்னுமொண்டு செய்யிறம். வருசா வருசம் கட்சி மாநாடு கூட்டுறம். அதில பிரகடனங்களும் விடுறம்.

**வன்னியப்பு :** ஓமடா தம்பி, நீ சொல்லத்தான் ஞாபகம் வருது. தமிழரசு கட்சி மாநாட்டில என்ன புதினமாம்?

**ரிப்போட்டர் :** ஒரு புதின-மும் இல்ல.. எல்லாம் வழமை தான்.

**கிளாக்கர் :** மாவைக்கு அல்வா குடுக்கிறாங்கள். முன்னமும் வட மாகாண-சபை தேர்தலில மாவையை காய் வெட்டினவங்கள். இப்ப உந்த பதவிய குடுத்து அவர தாக்காட்டப் பாக்கிறாங்கள்.

**வன்னியப்பு :** ஏன் தாக்காட்டோணும்.. மூப்பின்படி அவருக்குத் தானே அந்தப் பதவி வர வேணும்.

**கிளாக்கர் :** அது சரி தான். ஆனா, உங்களுக்குத் தெரியும்தானே.. தமிழரசுக் கட்சி தான் கூட்டமைப்பில உள்ள பெரிய கட்சி. அப்பிடிப் பாத்தா... அதின்ர தலைவர் தான் சம்பந்தனுக்குப் பிறகு வருங்காலத்தில கூட்டமைப்பு தலைவரா வரவேணும்.

**வன்னியப்பு :** ஓம் ஓம்...

**கிளாக்கர் :** இல்ல அது நடக்காது போல தெரியுது... வாற தேர்தலில சுமந்திரன் களம் இறங்கிறார். அவர எப்பிடியும் வெல்ல வைப்பாங்கள். இப்பவே கூட்டமைப்பில அவர் தான் பட்டத்து இளவரசன் மாதிரி. தேர்தலில வெண்டா இளவரசன், குதிரையேற்றத்தில, யானை ஏற்றத்தில சித்தி பெற்றது போலத்தான். பிறகு படிப்படியா அவர கூட்டமைப்புத் தலை-வரா மாத்துவாங்கள்.

**ரிப்போட்டர் :** உது எப்பிடி நடக்கும்? மாவை விடுமே?

**வன்னியப்பு :** ஏன் விக்கினேஸ்வரன் வரேக்க மாவை விட்டது தானே? மாவையை மேவித் தானே விக்கியர கொண்டு வந்தவங்கள்.

**கிளாக்கர் :** சரியா சொன்னீங்கள். மாவைக்குத் தகுதி காணாது, மொழிப் புலமை காணாது, எண்டெல்லாம் சொல்லி மாவையை அமத்திப்போட்டுத் தான் சம்பந்தர், விக்கிய கொண்டு வந்தவர். வருங்காலத்தில சுமந்திரன் விசயத்திலயும் அவர் அப்பிடிச் செய்யக்கூடும்.

**ரிப்போட்டர் :** ஏன் அப்பிடிச் செய்யோணும்.

**கிளாக்கர் :** முடிவெடுக்கிற ஆக்கள் கொழும்பு மைய தலைமையளா இருக்க வேண்டும் எண்டு தான்.

வன்னியப்பு : எதுக்கு?

**வன்னியப்பு :** கொழும்பு மைய தலைமையெண்டா தீவிரம் காட்டாது. குடுக்கிறத வாங்கும். கொழும்புக்கும் அதுதான் விருப்பம். இந்தியாவுக்கும் அதுதான் விருப்பம், அமெரிக்காவுக்கும் அது தான் விருப்பம்.

**ரிப்போட்டர் :** ஓ அதைத்தான் மோடி தெளிவா சொல்லிட்டாரே

**வன்னியப்பு :** என்ன சொன்னவர்?

**கிளாக்கர் :** நாங்கள் தாறத நீங்கள் வாங்குவீங்கள். ஆனா எதை குடுத்தாலும் உங்கட புலம்பெயர்ந்த ஆக்கள் திருப்திப்பட மாட்டினம். அவையள கொஞ்சம் உங்கட பிடிக்குள்ள கொண்டு வாங்கோ எண்டு.

**வன்னியப்பு :** ஏன் அப்பிடிச் சொன்னவர்?

**ரிப்போட்டர் :** புலம் பெயர்ந்த தமிழர்களை கட்டுப்படுத்தினால் இஞ்சயுள்ள அரசியல ஒரு மித நிலைக்கு கொண்டு வரலாம் எண்டு எல்லாரும் நம்பினம். தமிழ்ச் சனத்தின்ர போராட்ட நெருப்பை புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் அணையவிடாமல் வச்சிருக்கினம் எண்டு எல்லாரும் நம்பினம்.

**வன்னியப்பு :** அது உண்மையே?

**கிளாக்கர் :** அது முழுக்க முழுக்க உண்மையில்ல. பெரும்பாலான புலம்பெயர்ந்த தமிழர் எப்ப நாட்டுக்கு வந்து போகலாம் எண்டு தான் யோசிக்கினம். அரசாங்கத்தின்ர தடைப்பட்டியல்ல பெயர் வரக்கூடாது எண்டு யோசிக்கத் தொடங்கீட்டினம். ஒரு கொஞ்சம் புலம்பெயர்ந்த தமிழர்கள் தான் உண்மையா விசுவாசமா அர்ப்பணிப்போட செயற்படினம்.... மற்றது கொஞ்சம் பேர் 2009 மே மாசத்துக்கு பின்னுக்கு கிளம்பின ஆக்கள். இவையளில கனபேர் இஞ்ச சண்ட நடக்கேக்க வெளிநாடுகளில தஞ்சம் கோரினவை தான். தங்கட வயசொத்த பிள்ளைகள் இஞ்ச செத்துக் கொண்டிருக்க இவையளெல்லாம் அங்க படிச்சுத் தேறினவை. அப்பிடி படிச்சு பெற்ற பட்டங்கள இப்ப முகநூலில பெருமையா கொழுவி வச்சுக்கொண்டு ஒவ்வொரு நாளும் வீராவேசமா எழுதிக் கொண்டிருக்கினம்... இன்னொரு கொஞ்சம் பேர் இயக்கச் சொத்துக்கள தனிச் சொத்துக்களாக்கி அனுபவிச்சுக் கொண்டிருக்கினம். இவையள் தான் இப்ப கூடத் தீவிரம் காட்டுறது.

**வன்னியப்பு :** அங்க நிண்டு என்ன வீரம் காட்டுறது, உண்மையான வீரம் எண்டா நாட்டுக்கெல்லோ வரோணும்?

**ரிப்போட்டர் :** அவையள் வர ஏலாதாம். வந்தா எயார்போட்டில வச்சு பிடிப்பாங்களாம்.

**வன்னியப்பு :** போராட வாறவன் ஏன் எயார்போட்டால வரோணும்? நேர இந்தியாவுக்கு போய் கடலால வரட்டும். வந்து இஞ்ச வீரத்த காட்டட்டும்.

**கிளாக்கர் :** கடைசி மட்டும் வரமாட்டாங்கள். கோழைப் பயலுகள். எல்லாரும் நடிப்புச் சுதேசியள். சாகத் தயார் எண்டால் இவங்கள் சண்ட நடக்கேக்க வந்திருக்கோணும். குறைஞ்சது 2002இல சமாதானம் வரேக்க வன்னியில வந்து குடியேறி இருக்கோணும்.... ஒரு பொம்பிளைப் பிள்ள அது தான் ஒரு டொக்டர்.... சனல் நாலுக்கு பேட்டி குடுத்துதே. அதுக்கு என்ன பெயர்...? ஆ... வாணி குமார்... அந்தப்பிள்ள வெளில இருந்து வந்து கடைசி சண்ட மட்டும் நிண்டது தானே? அப்பிடி வேறயும் கொஞ்சம் பேர் வந்து நிண்டவ தானே? அவையளப் போல இவையள் ஏன் வரேல?

**ரிப்போட்டர் :** ஏனென்டால் அப்ப வீரம் கதைக்கிறவை, அத நிரூபிக்கிறதுக்கு ஒரு சண்டைக் களம் இருந்தது. இப்ப அப்படி இல்ல.. சண்டைக்களம் இல்ல. வீரம் கதைக்கிற எவனும் சாகப்போறதில்ல.

**கிளாக்கர் :** அந்த துணிச்சலில தான் எல்லாரும் வாளை விசுக்கிக் கொண்டு திரியுறாங்கள். இஞ்ச யாழ்ப்பாணத்திலயும் கொஞ்சப் பேர் கடும் தீவிரமா கதைக்கிறாங்கள். ஆனா யாருமே 95இல வன்னிக்கு வரத் தயாரா இருக்கேல்ல. குறைஞ்சது 2002லயும் வன்னிக்கு வராதவதான். 2009 க்கு முன்னுக்கெல்லாம் வராத வீரம் இப்ப பீறிட்டுக் கிளம்புது. திரும்பி ஒரு சண்டை வந்தா முதலில ஓடிப் பதுங்கிறது உந்தக் கள்ளர் தான்.

**வன்னியப்பு :** உண்மை தான் நாங்கள் அடுத்தடுத்து இடம்பெயரேக்க கொத்துக் கொத்தா சாகக்குடுக்கேக்க எங்களோட நிக்காதவை தான் இப்ப எங்கட பிரதிநிதியள்...

**ரிப்போட்டர் :** எங்கட எம். பிமார்ல ஒருவருமே கடைசிச் சண்ட மட்டும் நிக்கேல்ல.. மாகாண சபை உறுப்பினர்களிலயும் மிகச் சிலர் தான் வட்டுவாகல கடந்து வந்தவை.

**வன்னியப்பு :** வலி தெரியாதவன் எல்லாம் வலியைச் சொல்லி வாக்குக் கேட்டு இப்ப வெள்ளையும் சொள்ளையுமா மாலையும் கழுத்துமா திரியுறான்.

**கிளாக்கர் :** தமிழ் மக்களின்ர பிரச்சினையே இப்ப அது தான். வலி தெரியாதவனெல்லாம் தமிழ் மக்களின்ர வலிகளுக்கு தலைமை தாங்க பார்க்கிறான். ஒரு புறம் கொழும்பிலயும் இந்தியாவிலயும் சொத்துக்களையும் இனசனங்களையும் வச்சிருக்கிறவன்... இன்னொரு புறம் புலம்பெயர்ந்த நாட்டில நல்லா வேர் விட்டவன்.... இந்த ரெண்டு பகுதியும் தங்கட சொத்துக்களையும் சுகங்களையும் மேல் மட்ட உறவுகளையும் தங்கட சனத்துக்காக தியாகம் செய்து காட்டட்டும் பாப்பம்?

**ரிப்போட்டர் :** கடைசி மட்டும் செய்ய மாட்டாங்கள். முதலில உந்த இரண்டு பகுதியிட்ட இருந்தும் எங்கட சனத்திண்ட அரசியல விடுதலை செய்ய வேணும். அது தான் ஒரு சரியான தொடக்கமா இருக்கும்.

**வன்னியப்பு :** சரியாச் சொன்னியடா.. ஆனா ஆர் விடுதலை செய்யிறது?

வன்னியப்பு வெற்றிலைய துப்பி விட்டு எழுந்தார். ஐயர் வந்து விட்டார். பறை ஓயத் தொடங்கியது.



# மைத்திரி அது ஒரு சரியான தெரிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, மகிந்தவுக்கு பாரிய சவாலாக அமைவார் என்று விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் சிறந்த ஒரு போட்டியாளரைத் தெரிவு செய்திருப்பதாக அவர் கூறுகிறார். அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒரே குரலில் ஜனாதிபதியைத் தோற்கடிப்பதற்காக களமிறங்கியிருப்பதாகக் கூறும் அவர், முழுப் போராட்டத்துக்குச் செல்வதற்கு முன்னரேயே அது முடிந்துவிட்டது.

"பாரியதொரு வீழ்ச்சி, உடைவு, தோல்வியின் முன்கூட்டிய எதிர்வுகூறல்" என்றுதான் இதனைக் குறிப்பிட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கான போராட்டம் 70 வீதமளவு முடிந்து விட்டது. ஜனாதிபதி அனைத்து துரும்புகளையும் பயன்படுத்தி முடிந்து விட்டதாகவும், எதிர்க்கட்சி இப்போதுதான் ஆரம்பித்திருப்பதாகவும் விக்டர் ஐவன் குறிப்பிட்டுள்ளார்.



# ரட்ணசிறி எந்தப்பக்கம்?

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க தலைமையில் ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் அடங்கிய குழு ஒன்று சந்திரிகாவுடன் இணையவுள்ளதாக தெற்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் சந்திரிகாவுடன் அமைச்சர்களான மைத்திரிபாலசிறிசேன, ராஜித சேனாரத்ன உட்பட்ட 6 பேர் இணைந்துள்ள நிலையில் இவர்களுக்கு மேற்படியாக இந்த 10 பேரும் இணையவுள்ளனர்.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிறேம் ஜயந்த, ஜனக பண்டார தென்னகோன், பிரதியமைச்சர்களான ரெஜினோல் குரே, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்கவின் மகனான நாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமசிங்க ஆகியோரே இணையவுள்ளதாகவும் உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.



## கடும் பாதுகாப்பு நாடு முழுவதும்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் அது தொடர்பான, பாதுகாப்புக்கென விசேட நடவடிக்கையொன்றை பொலிஸ் தலைமையகம் திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

# மாகாண சபைகளிலும் கண் வைக்கிறது மைதிரியின் கூட்டணி

(கொழும்பு)

சில மாகாணசபைகளின் அதிகாரங்களை கைப்பற்றும் முயற்சியில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி இப்போது ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்த மாகாண சபைகளின் அதிகாரங்களை கைப்பற்ற முயற்சிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஆளும் கட்சியை விட்டு வெளியேறியதனைத் தொடர்ந்து ஆளும் கூட்டணிக்குள் ஸ்திரமற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர்கள் மாகாணசபைகளின் ஆட்சி அதி காரத்தை கைப்பற்ற முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாணசபை, ஊவா மாகாணசபை மற்றும் மேல் மாகாணசபை ஆகியவற்றின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் முனைப்புகளில் எதிர்க்கட்சிகள் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சி தாவ விரும்பும் மாகாணசபை உறுப்பினருக்கு குறைந்தபட்சம் பத்து மில்லியன் ரூபா பணம் வழங்கி இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்சி தாவத் தயார் எனவும் குறைந்தபட்சம் அதற்கு 25 மில்லியன் ரூபா தேவை எனவும் சில ஆளும் கட்சி உறுப்பினர்கள தெரிவித்துள்ளனர்.

மேலும் அரசியல் காரணிகளின் அடிப்படையிலும் சில. கட்சித் தாவ ஆயத்தமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உடம்பை தேற்றிக் கொள்வது நல்லது



மைத்திரிபால சிறிசேனவையும் அரசாங்கம் சிறையில் அடைக்கக் கூடும் என்பதால் அவர் இப்போதே தனது உடலைத் தெம்பாக்கிக் கொள்வது நல்லது என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மாற்றுக் கொள்கையாளர்களை பழிவாங்க முயற்சிக்கின்றது. மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு முற்று முழுதாக அகற்றப்பட்டுள்ளது. தற்போது மைத்திரிபாலவுடன் குரோத உணர்வுடன் செயற்படுகின்றனர். எவ்வாறு மைத்திரிபாலவிற்கு எதிராக வழக்குத் தொடர்வது என யோசிக்கின்றார்கள்.

எவ்வாறு வெலிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பி வைப்பது என்பது பற்றியும் திட்டமிடுகின்றார்கள்.

சில வேளைகளில் நான் சிறையில் தூங்கிய அதே மேசையில் மைத்திரிபாலவும் தூங்க நேரிடலாம். எனவே இப்போதே உடற்பயிற்சி செய்து உடலை தெம்படையச் செய்து கொள்வது நல்லது. ஆளும் கட்சியின் ஒரு தொகுதியினருக்கு இன்று புத்தி தெளிந்துள்ளது. மைத்திரிபால சிறிசேனவிற்கு ஒத்துழைப்பு வழங்கிய எனது சாதாரண தர வகுப்புத் தோழர் ராஜித, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோருக்கு நன்றி பாராட்டுகின்றேன். எவ்வாறெனினும் எமது கட்சியின நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படக் கூடிய வகையிலான மேடைகளில் ஏறப் போவதில்லை என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

# குவிகிறது "லைக்"

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவினது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கம் நேற்று அதிகாலை வரை 50,000 லைக்குகளை எட்டியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பொது வேட்பாளர் அறிவிப்பு வெளியானது முதல் மைதிரிபால சிரிசேன அவர்களின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை சுமார் 24,000 பேர் ஒரே இரவில் லைக் செய்துள்ளனர். பொது பேட்பாளர் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரை 13,000 பேஸ்புக் பாவனையாளர்கள் அவரின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை லைக் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் நேற்று அதிகாலை வரை அவரது பக்கம் சுமார் 50,000 பேஸ்புக் லைக்குகளை கடந்துள்ளது.




ஜானாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பேஸ்புக் பக்கம் சுமார் 420,000 லைக்குகளை பெற்றுள்ள அதேவேளை மைத்ரிபால சிறிசேன அவர்கள் மிக குறுகிய காலத்துக்குள் 100 000 லைக்குகளை பெறுவார் என அப்பக்கத்தில் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் இந்தியாவில் அதிரடி அரசியல் பிரவேசம் ஒன்றை மேற்கொண்ட ஆம் ஆத்மி கட்சி தலைவர் கெஜ்ரிவாலின் பேஸ்புக பக்கம் குறுகிய காலத்துக்குள் திடீரென பிரபலமானது. குறுகிய காலத்துக்குள் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் அவரின் பேஸ்புக் பக்கத்தை லைக் செய்திருந்தனர்.

இந்தியாவின் சனத்தொகையையும் அங்குள்ள இணைய பாவணையாளர்களை ஒப்பீட்டளவில் பார்க்கும் போது மைத்ரிபால சிரிசேனவின் பேஸ்புக்பக்கத்தின் லைக் அதிக ரிப்பு அனைவரையும் அவரை திரும்பிப் பார்க்க செய்துள்ளது.



## வத்திக்கான் எதிர்பார்க்காத தீர்மானம்

பாப்பரசர் முதலாவது பிரான்ஸிஸ் இலங்கைக்கு வருகை தரும் தினத்துக்கு நெருக்கமான நாளில், ஜனாதிபதி தேர்தல் தினம் குறிக்கப்படும் என்று தாம் எதிர்பார்க்கவில்லை என இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பதுளை பேராயர் வணக்கத்துக்குரிய வின்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பாப்பரசர் வருகையின் 10 நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படும் என்ற எதிர்ப்பார்ப்பு நிலவியது. குறித்த 10 நாட்களுக்குள் நாட்டில் இயல்பு நிலை ஏற்படும் என்ற அடிப்படையிலேயே இந்த திகதி நிர்ணயிக்கப்பட்டது.

எனினும் தேர்தல் திணைக்களத்தின் புதிய அறிவிப்பு குறித்து வத்திக்கான் கவனம் செலுத்தியுள்ளது. ஏற்கனவே பாப்பரசரின் விஜயம் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப வத்திக்கானின் இறுதித் தீர்மானம் வெளியிடப்படும் என்று பதுளை பேராயர் குறிப்பிட்டுள்ளார்.



## எமது தீர்மானம் இப்போதைக்கு இல்லை

தமது அமைப்பு சற்றும் எதிர்பாராத ஒருவரே பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளதாக பொதுபல சேனா என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனால் தற்போது அரசியல் சூழ்நிலை குறித்து ஆராய்ந்து தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். இந்த புதிய சூழ்நிலை மிகவும் சிக்கலுக்குரியது எனவும், இதனை ஆழமாக ஆராய்ந்தே தீர்மானம் ஒன்றை எடுக்கவிருப்பதாகவும் தமது அமைப்பின் தீர் மானம் காலதாமதமாகலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், பொதுபல சேனா பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவின் ஆதர வுடன் இயங்கி வருவதால் ஜனாதி பதித் தேர்தலில் மகிந்த ராஜபக் ஷவையே ஆதரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றது.

## பேருந்து தரிப்பு நிலையம் நெடுங்கேணியில் திறப்பு

நெடுங்கேணியில் 2 பேருந்து தரிப்பு நிலையம் புதிதாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விநாசித்தம்பி நடராசா நினைவாக நெடுங்கேணி வவுனியா பிரதான வீதியிலும் நெடுங்கேணி ஒட்டுசுட்டான் வீதியிலும் பேருந்து மக்கள் தரிப்பிடம் 2 புதிதாக அக் குடும்ப உறவினர்களினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வைபவ ரீதியாக மக்கள் பாவனைக்கு கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

## வெற்றுக் காணியில் உள்ள பற்றைகளை அகற்ற கோரிக்கை

(அச்சுவேலி)

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரிக்கு அருகாமையில் உள்ள சிறிய காணியில் பற்றைகள் செடிகள் வளர்ந்து கவனிப்பாரற்றுக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணியில் சிறுசெடிகள் மற்றும் பற்றைகள் காணப்படுவதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக காணப்படுகின்றது. இதனால் அப்பகுதியிலுள்ள சிறியோர் முதல் முதியவர்கள் வரை நோய்த் தொற்றுக்கு இலக்காகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்தக் காணிக்குச் சொந்தக்காரர்கள் காணியைப் துப்புரவு செய்ய முன்வரவேண்டும் அல்லது சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என பாடசாலை சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

## முரசின் இன்றைய பலன்



(24.11.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி.
துதியை / சித்தம்.
கேட்டை நட்சத்திரம் பிற்பகல் 01.36 வரை. பின் மூலம்.
இராகு காலம் 07.41 - 09.11 வரை. சுபநேரம் 12.11 - 01.41 வரை.


ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்டிருந்த காரியம் வெற்றியைத்தக்க வைக்கும். கல்வியில் இருந்த மந்த நிலை மாற்றமடையும். |
| ரிஷபம் | பழிவாங்கும் மனநிலையை விடுத்து பொறுமை காத்தல், புதிய தொழில் வாய்ப்பு தேடிவரும் போது ஏற்றுக் கொள்ளுதல் நன்று. |
| மிதுனம் | தெய்வ தலத்திற்கு விஜயம் செய்தல். தம்பதியர் மத்தியில் சச்சரவு தோன்றிப்பின் சுமுக நிலைவந்தடையும். |
| கடகம் | கூட்டுத் தொழிலைக் கைவிட்டு தனித்தியங்க முனைதல். தர்மம் வழங்க எண்ணுதல். |
| சிம்மம் | புதிய பொருட்கள் கொள்வனவு செய்ய எண்ணுதல். நிரந்தரமான தொழில் கைக்கெட்ட வாய்ப்பு. |
| கன்னி | புலனை அடக்குவதினால் ஒழுக்கம் பாதுகாக்கப்படல். சக ஊழியர்களின் உதவி பணியில் இருந்த வழு குறைதல். |
| துலாம் | மதிப்பும் பாராட்டும் ஏற்படல், காரிய சித்திபெற பொறுமையைக் கைக்கொள்ளல். |
| விருச்சிகம் | பொதுக்காரியங்களில் ஈடுபடல். வெளியூர் பயணத்தைக் கைவிடத்துணிதல். |
| தனுசு | புத்திர பாக்கியம் கிட்டும். தொழிலில் முதலீடு செய்ய பணம் புரட்டல். |
| மகரம் | சுபகாரிய நிகழ்வுக்கு பணமின்றித் திண்டாடுதல். வெளியூரிலிருந்து உறவினர் வருகை. |
| கும்பம் | தேக நலம் பாதிக்கப்படல், புதிய முயற்சியைக் கைவிடல். |
| மீனம் | பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகள் ஏற்படும். வங்கிக் கடன் கிட்டும் செய்தி கிடைத்தல். |

## பசுமைப்புரட்சியாளர் செகரராஜசிங்கம்

## 82 ஆயிரம் மரங்களை வழங்கி சாதனை

### பாபாவின் ஜனன தினத்தில் பிரத்தியேக மரம் நாட்டல் சேவை



(யாழ்ப்பாணம்)

மானியூர் பசுமைப்புரட்சியாளர் வை.செகரராஜசிங்கம் இதுவரை 82 ஆயிரம் மரங்களை கடந்த 40 ஆண்டுகளில் உற்பத்தி செய்து பாபாவின் பிறந்த நாள்களில் வழங்கியுள்ளார்.

இவரது மரம் வழங்கும் சேவைக்கு கடந்த வருடம் பொது அமைப்பு ஒன்று 'பசுமைச்சுடர்' எனும் விருதினை இவருக்கு வழங்கி கௌரவித்தது.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை உபதவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் தெரிவித்தார்.

வடமாகாண மரம் நடுகை மாதம் தற்போது இடம்பெறுகின்றது,

ஆனால் மானியூர் பசுமைப் புரட்சியாளர் வை.செகரராஜசிங்கம் (சமாதான நீதவான்) தனி மரமாக நின்று தனது சொந்த செலவில் மரங்களை உருவாக்கி பாடசாலைகள், சமூக நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள் என எண்ணற்ற அமைப்புகளுக்கு பயன்தரு கனிமரங்களை வழங்கியுள்ளார்.

இன்று வயது முதிர்ந்த நிலையிலும் பயன்தரு மரங்ளை வழங்கி கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றார்.


நேற்று பாபாவின் பிறந்தநாள நிகழ்வில் கலந்து கொண்ட மக்களுக்கு மரங்களை வழங்கினார்.

வடமாகாண விவசாய அமைச்சு இவ்வாறான உயர்ந்த நோக்கம் கொண்டவர்களுக்கு உதவுவதன் ஊடாக மேலும் வாழ்வில் ஒளியேற்றலாம்.

மானியூர் வை.செகரராஜசிங்கம் ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபராகவும், வலி. தென்மேற்கு பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

சத்திய சாயிபாபாவின் நேரடி தரிசனம் பெற்ற செகரராஜ சிங்கமும் அவரது பாரியார் இராஜேஸ்வரியும் சமூகசேவை செய்வதே அவர்களது உயரிய நோக்கமாக கொண்டு இன்று வரை செயலாற்றி வருகின்றனர்.

மில்க்வைற் கனகராசா இவரது மகத்தான சேவைக்கு "விடாக்கண்டன்" எனும் கௌரவ பட்டத்தை வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் பாலர் பாடசாலையின் 21 ஆவது கலைவிழா மக்கள் சேவைமாமணி நா.சேனாதிராசா தலைமையில், நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது... (11)

## பரிசளிப்பு விழா

மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப 1 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி க.சர வணபவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக வலிகாம வலய வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜாவும், கௌரவ விருந்தினர்களாக வலிகாம வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆலோசகர் செ.சுப்பிரமணியம், மானிப்பாய் மக்கள் வங்கியின் மானிப்பாய் சேவை நிலையத்தின் பொறுப்பாளர் திருமதி பி.விசாகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த கல்வியாண்டில் வெற்றிபெற்ற மாணவர்ளுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (48)

## முதியோருக்கான கொடுப்பனவு முதற்கட்ட மதிப்பீட்டுப் பணி

(யாழ்ப்பாணம்)

முதியோர்களுக்கான தேசிய செயலகம், 2015 ஆம் ஆண்டில் 70 வயதை அடைந்த முதியோரிற்கு 1000 ரூபா கொடுப்பனவை வழங்குவது தொடர்பான நிதி மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது.

சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் இது தொடர்பான சுற்றுநிருபத்தை அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள் ளார்.

01.01.2015 இல் 70 வயதை அடையும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அதே திகதியில் 70 வயதை பூர்த்தி செய்து 3000 ரூபாவிற்கு குறைவான மாதாந்த வருமானத்தைப் பெறுவோர் எத்தனை பேர்? அதே திகதியில் சமுர்த்தி உதவியின் கீழ் 1000 ரூபா உதவிப் பணம் பெறுவோர் எத்தனை பேர் போன்ற விபரங்களை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஊடாக பெற்று வருகிறது. இந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து மாதாந்தம் 70 வயதை அடைந்த வறிய முதியோருக்கு தலா 1000 ரூபா மாதாந்தம் அவர்களது வீட்டிற்கு அண்மையிலுள்ள தபாலகம், உபதபாலகம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. (90)

# மைலோ கிண்ணம் மீண்டும் சென். மேரிஸ் வசம்

## இறுதிவரை உறுதியுடன் போராடி இரசிகர்கள் பாராட்டைப் பெற்றது கலைமதி






(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ண கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை நாவாந்துறை சென். மேரிஸ் அணி மீண்டும் கைப்பற்றிக் கொண்டது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்த மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று மாலை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியும் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதிக் கொண்டன.

முற்பாதி ஆட்டம் ஆரம்பமான நான்காவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணிக்கு தண்ட உதை வாய்ப்பு கிடைத்தது. இதனை உரிய முறையில் பயன்படுத்திய சென்.மேரிஸ் அணியின் யூட், கோலாக்கியதுடன் அணியை முன்னிலைப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. குறிப்பாக, நவிண்டில் கலைமதியின் ஆட்டம் இரசிகர்களை பரவசப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. சென். மேரிஸ் அணிக்கு இணையாக ஆடிய அதேவேளை, கோலடிக்கும் அரிய வாய்ப்புகள் சிலவற்றைக் கோட்டையும் விட்டது. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. பிற்பாதி ஆட்டத்தின் 46ஆவது நிமிடத்தில் கலைமதி அணியின் பானுப்பிரியன் சிறப்பானதொரு கோலை அடித்து ஆட்டத்தை சமப்படுத்தினார். இதன் பின்னர் இரு அணிகளும் வெற்றிக் கோலை அடிக்கும் முனைப்புடன் போராடின. இதில் 59ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் ஜக்ஷன் அதிரடியாக ஆடி கோல் அடித்ததுடன் அணியையும் முன்னிலைப்படுத்தினார். இதன் பின்னர் இரு அணிகளும் வேகமாகச் செயற்பட்டபோதிலும் மேலதிகமாக கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது முறையாகவும் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டித் தொடரில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியை வீழ்த்தி சென். மேரிஸ் அணி கிண்ணம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு பிரதம நடுவராக டெனி, பக்க நடுவர்களாக துஷ்யந்தன், மகிபன் ஆகியோர் கடமையாற்றினர்.

இதேவேளை இப்போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக சென். மேரிஸ் அணியின் செனட், தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த அன்ரன் சாள்ஸ், சிறந்த கோல் காப்பாளராக சென். மேரிஸ் அணியின் சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. முதல் நான்கு இடங்களைப் பிடித்த அணிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டி நிகழ்வில் நெஸ்லே லங்கா நிறுவன அதிகாரிகள், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள், வடமாகாண முன்னாள் விளையாட்டு அதிகாரி, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ் உட்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்பந்து இரசிகர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(எஸ்.பி.,93,48, 20)

# இறுதிப் போட்டியிலும் அசத்திய ஆஸி.

## தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம்

(சிட்னி)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஐந்தாவது போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி இரு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றதுடன் ஒரு நாள் போட்டித் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று சிட்னியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி குயின்டன் டி கொக்கின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப்பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குயின்டன் டி கொக் 107 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கம்மின்ஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 281 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 47.1 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வட்சன் ஆட்டமிழக்காது 82, ஸ்மித் 67, ஆரோன் பிஞ்ச் 70 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரொபின் பீற்றர்சன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக குயின்டன் டி கொக், தொடர் நாயகனாக ஸ்ரீபன் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்ரேலிய அணி 4-1 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டதுடன் ஒரு நாள் போட்டித் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரில் அவுஸ்ரேலிய அணி 2-1 என்ற கணக்கில் தொடரை வென்றமை குறிப்பிடத்தக்கது.



விளையாட்டுச் செய்திகள்

## இந்தியாவுக்கு சாதகம்

உலகக்கோப்பையை எந்த அணி கைப்பற்றும் என்பதை உறுதியாக கூற முடியாது. 5 அணிகள் தற்போது ஒருநாள் போட்டியில் மிகவும் சிறப்பாக விளையாடி வருகின்றன.

தற்போதைய ஒருநாள் போட்டியின் விதிமுறை, விளையாடி வரும் சிறப்பான நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டால் இந்திய அணி உலகக் கோப்பையை தக்க வைத்துக் கொள்ள முடியும். தற்போதைய அவுஸ்ரேலிய பயணம் சாதகமான சூழ்நிலையாகும்.

2 மாதங்கள் அங்கு விளையாடுவதால் ஆடுகள தன்மையை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்துவதை பொறுத்தே அவுஸ்ரேலிய பயணம் இருக்கும். அவுஸ்ரேலிய ஆடுகளங்கள் அதிகமாக பவுன்ஸ் ஆகும் என்பது முக்கியத்துவம் பெற்றது. இதை வீரர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன் என இந்திய அணியின் முன்னாள் வீரர் லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

# அரையிறுதிக்கு முன்னேறிய அணிகள்

(வடமராட்சி)

ஆளுநர் வெற்றிக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு வல்வை, திக்கம் இளைஞர், பலாலி விண்மீன் மற்றும் மணற்காடு சென். சேவியர் அணிகள் முன்னேறியுள்ளன.

ஆளுநர் வெற்றிக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் வடமாகாண ரீதியாக நடைபெறவுள்ளது. இதன் முதற்கட்டப் போட்டிகளாக லீக் அணிகளுக்கிடையில் தகுதி காண் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கிடையிலான தகுதிகாண் போட்டிகளின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் அல்வாய் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.



முதலாவது காலிறுதிப் போட்டியில் வல்வை அணியும் அல்வாய் நண்பர்கள் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வல்வை அணி அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் அல்வாய் நண்பர்கள் அணி செயற்பட்டபோதிலும் அதன் முயற்சிகள் அனைத்தும் வல்வை அணி வீரர்களால் முறியடிக்கப்பட்டன. நிறைவில் வல்வை அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் திக்கம் இளைஞர் அணியும் வல்வை ஆதிசக்தி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் திக்கம் இளைஞர் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் அணியும் உடுத்துறை செந்தமிழ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே திக்கம் இளைஞர் அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. இறுதியில் பலாலி விண்மீன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் அரையிறுதியில் வல்வை அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணியும், திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து மணற்காடு சென். சேவியர் அணியும் மோதவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# முடிவை மறுபரிசீலனை செய்யக் கோரல்



(கொழும்பு)

ஓய்வு முடிவை மீள்பரிசிலனை செய்யுமாறு இலங்கை கிரிக்கெட் சபை சங்கக்காரவை கோரியுள்ளது.


அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நிறைவடைந்த பின்னர் சகலவித கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறப்போவதாக இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சங்கக்கார தெரிவித்திருந்தார். உலகக்கிண்ணத்திற்கு பின்னர் ஓய்வு பெறுவதாகவே அவர் தெரிவுக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.

இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவினர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற வேண்டாம். இன்னும் சிறிது காலம் விளையாடி ஓய்வு பெறுமாறு கேட்டுள்ளனர். அணியிலிருந்து இரு சிரேஷ்ட வீரர்கள் ஓய்வு பெற்றால் அணிக்குப் பின்னடைவை உருவாக்கும், எனவே குறித்த முடிவு பற்றி யோசிக்குமாறு கோரியுள்ளனர். இதனையடுத்து டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவதா ஓய்வு பெறுவதா என யோசித்து வருவதாக குமார் சங்ககார தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் நடைபெறவிருந்த டெஸ்ட் தொடருடன் டெஸ்ட் போட்டிகளில் இருந்தும், உலகக்கிண்ண தொடருடன் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவது என்ற முடிவையே குமார் சங்கக்கார எடுத்திருந்தார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பல்வேறு சாதனைகளை தன்வசப்படுத்தியுள்ள சங்கக்கார தொடர்ந்து விளையாட சம்மதிக்கும் இடத்து மேலும் பல சாதனைகளை ஏற்படுத்த முடியும் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, அதிக இரட்டைச் சதம் அடித்த இரண்டாவது வீரர் என்ற சிறப்பைக் கொண்டுள்ள சங்கக்கார மேலும் இரு இரட்டைச் சதத்தை விளாசுவதன் மூலம் பிரட்மனின் சாதனையைச் சமன் செய்ய முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


# கங்குலி ஆதங்கம்



அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் சிறப்பாக செயற்பட வேண்டும் என்றால் டெஸ்ட் போட்டி தொடருக்கு முன்பாக நன்கு தயாராக வேண்டியது மிகவும் முக்கியமானது. முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்பாக இந்திய அணி இரண்டு பயிற்சி ஆட்டத்தில் மட்டுமே விளையாடுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி கவலை தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிக்கு தயாராகுவதற்கு இரண்டு பயிற்சி ஆட்டத்தில் ஆடுவது என்பது நல்ல முடிவு கிடையாது. ஹோலி போன்ற வீரர்களுக்கு தயாராக குறைந்தபட்சம் 4 இனிங்ஸ் தேவையாகும்.

உலக கோப்பை போட்டி வரை இந்திய அணி கப்டன் பதவியில் மாற்றம் இருக்காது என்று நினைக்கிறேன். நானும், டோனியும் வெவ்வேறு கால கட்டங்களில் கப்டன் பதவியில் இருந்து இருக்கிறோம். இதனால் எங்கள் இருவரையும் ஒப்பிடக்கூடாது. பெரிய போட்டிகளில் டோனி சிறப்பாக வெற்றியை பெற்று கொடுத்து இருக்கிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# புதிய மைல்கல்லை நோக்கி ரூனி

2016ஆம் ஆண்டுக்கான யூரோ கிண்ண கால்பந்து போட்டித் தொடரில் பங்குபற்றும் அணிகளுக்கான தகுதிகாணும் போட்டிகளில் இங்கிலாந்துக்கும் ஸ்லோவேனியாவுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் இங்கிலாந்து அணி யினர் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றனர்.

இங்கிலாந்தின் வெம்ப்லி நகரில் நடந்த இப்போட்டி வேன் ரூனிக்கு 100ஆவது சர்வதேச கால்பந்து போட்டியாக அமைந்ததுடன், இப்போட்டியில் ரூனி போட்ட ஒருகோல் இங்கிலாந்து சார்பாக அவர் போட்ட 44ஆவது கோலாகும். இதன் மூலம் ரூனி இங்கிலாந்து வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய கோல்கள் எண்ணிக்கை வரிசையில் மூன்றாம் இடத்தைப் பிடித்து புதிய மைல்கல்லை எட்டினார்.

இங்கிலாந்து சார்பாக அதிக கோல்களைப் போட்டு முதலிடத்தில் இருப்பவர் முன்னாள் கால்பந்து வீரர் பொபீ சார்ல்டன் (1958-1970) ஆவார். இவர் 106 போட்டிகளில் விளையாடி 49 கோல்களை இங்கிலாந்துக்காக போட்டுள்ளார். இச்சாதனையை எட்ட ரூனிக்கு இன்னும் 5 கோல்களே தேவையாக உள்ளதால், வெகு சீக்கிரம் ரூனி இச்சாதனையை தன்வசப்படுத்துவார் என்பது இங்கிலாந்து கால்பந்து இரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஸ்லோவேனியாவுடனான போட்டியில் ரூனி போட்ட ஒரு கோலைத் தவிர மற்றைய இரு கோல்களையும் இங்கிலாந்து முன்கள வீரர் டெனியல் வெல்பக் அடித்துள்ளார். இதன் மூலம் இங்கிலாந்து யூரோ கிண்ண தகுதிகாண் தொடரின் ஈ பிரிவில் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

# ஸ்மித்துக்கு கப்டன் பதவி; பரிந்துரைக்கும் முன்னாள் வீரர்கள்

அவுஸ்ரேலிய அணியின் இளம் வீரர் ஸ்ரீஸ் ஸ்மித்தை கப்டனாக நியமிக்க வேண்டும் என்று முன்னாள் ஆஸி. வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

டிசம்பர் 4ஆம் திகதி இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது. இதில், தற்போது காயத்தால் அவதிப்பட்டு வரும் மைக்கல் கிளார்க் பங்கேற்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்தியக் கப்டன் டோனியும் காயம் காரணமாக முதல் டெஸ்டில் பங்கேற்கமாட்டார். ஹோலி அணிக்குத் தலைமை ஏற்கவுள்ளார்.

ஒருவேளை கிளார்க் முதல் டெஸ்டில் ஆடவில்லை எனில், துணைக் கப்டனும் விக்கெட் காப்பாளருமான பிராட் ஹடின் கப்டன் பொறுப்பை ஏற்கலாம். ஆனால், ஹடினுக்குப் பதிலாக ஸ்ரீபன் ஸ்மித்துக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது முன்னாள் வீரர்களின் விருப்பம்.

முன்னாள் கப்டன் கிம் ஹியூஸ் கூறியதாவது:

பிராட் ஹடினை எந்த விதத்தில் தேர்வு செய்கிறீர்கள். இளம் வீரருக்கு (ஸ்ரீபன் ஸ்மித்) ஒரு வாய்ப்பு அளிக்கலாம். கடந்த ஆண்டு ஷெபீல்ட் ஷூல்ட் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஸ்மித் அற்புதமாக ஆடினார். அவரால் மூன்றாவது இடத்திலும் சிறப்பாக ஆட முடியும். விக்கெட் காப்பாளரான ஹடினுக்கு, ஸ்மித் உதவியாக இருப்பார். அவுஸ்ரேலிய அணி வலுவான பந்து வீச்சைப் பெற்றுள்ளது என்பதால், ஸ்மித்தை கப்டனாக நியமிக்கலாம்.

எல்லாவற்றையும் விட, இந்தியாவை அவுஸ்ரேலியாவில் எதிர்கொள்கிறோம். இது, மேற்கிந்தியத் தீவுகளை அதன் மண்ணில் எதிர்கொள்வதைப் போன்றது அல்ல. டோனி இல்லாததால் அனுபவம் இல்லா கப்டனுடன் இந்தியா களமிறங்குகிறது. எனவே, சராசரியான அணியான இந்தியாவுக்கு எதிராக ஸ்மித்தால் சிறப்பாக செயற்பட முடியும் என்று ஹியூஸ் தெரிவித்தார்.

மெக்ராத் கூறுகையில், அடுத்த அவுஸ்ரேலிய கப்டனாக ஸ்மித் நியமிக்கப்படுவதற்கான சமிக்ஞை தெரிகிறது. ஸ்மித் ஏற்கனவே நியூ சௌத் வேல்ஸ் அணியின் கப்டனாக இருந்துள்ளார். வாய்ப்புக் கொடுத்தால் அவர் கப்டனாக ஜொலிப்பார் என்றார்.



அதேநேரத்தில், மைக் ஹசி இதை ஆதரிக்கவில்லை. ஸ்மித்திடம் கப்டனுக்குரிய தகுதி உள்ளது. ஆனால், இளவயதிலேயே அவரை டெஸ்ட் அணியின் கப்டனாக நியமிப்பது, அவரது வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

# சீமானின் நெருப்புக் கேள்விக்கு விக்னேஸ்வரனால் பதிலளிக்க முடியுமா?



தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தில் காலடி வைத்த காலத்தில் இருந்து இந்தப் போராட்டம் என்றாலே என்ன என்று தெரியாத "விக்னேஸ்வரனை" கூட்டமைப்பினர் வடமாகாண முதல்வராக நியமித்துள்ளனர். "விக்னேஸ்வரன்" தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு பல வழிகளிலும் குறுக்கே நின்ற ஒருவரென பலரும் வாதிட்டு வருகின்ற போதிலும் கூட்டமைப்பினர் அவரைத் தூக்கி முதல்வராக்கி, சபையில் போய்ச் சும்மா இருக்குமாறு வைத்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தியா சென்ற முதலமைச்சரை அங்கு சீமான் மட்டுமல்லாது தமிழக ஊடகங்கள் சிலவும் இவர் அரசியல் சாணக்கியமற்றவர் என்பதை விமர்சிக்கத் தவறவில்லை.

புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களையும் நிலைப்பாடு களையும் வெளிப்படுத்தி ஆட்சிக்கு வந்த "விக்னேஸ்வரன்" பின்னைய நாட்களில் புலிகளையும் ஏனைய ஆயுதப் போராட்டங்களையும் விமர்சித்ததன் காரணமாக கடும் சீற்றத்திற்கு ஆட்பட்டு இருந்தார்.

தமிழ் நாட்டிலுள்ள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளை வைத்தே தங்களது அரசியலையும் பிழைப்பினையும் நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக "சீமான்" போன்றவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயர் இல்லாவிட்டால் செய்வதற்கு அரசியலே இல்லை என்ற நிலை. புலிகள் இலங்கையில் அழிக்கப்பட்ட போதிலும் புலிகளை வைத்து அரசியல் நடத்துகின்ற விண்ணாணத்தை "சீமான்" இதுவரை கைவிடவில்லை.

சீமானுக்கு "விக்னேஸ்வரனால்" பதிலளிக்க முடியுமா? என்பது ஒருபுறமிருக்க, "விக்னேஸ்வரனுக்கும்", "சீமானுக்கும்", தமிழர்களின் போராட்டத்திற்கும் என்ன தொடர்பு உள்ளது? என்ற கேள்வியும் எழுவது நியாயமானது.

"ஐயா விக்னேஸ்வரன் யார்? இவ்வளவு காலமும் அவர் எங்கிருந்தார்?" என கேள்விகளை அடுக்கும் சீமான், மேலும் தனது கேள்விகளில் இவ்வாறி குறிப்பிடுகிறார்.

"இலங்கையில் ஈழப்போராட்டம் எத்தனை காலமாக இடம் பெற்று வருகின்றது என ஐயா "விக்னேஸ்வரனுக்கு" தெரியுமா?

"இந்திய மக்கள் செய்யும் நடவடிக்கைகள் காரணமாக தங்களுக்கு நெருக்கடி வந்துள்ளதாக" "விக்னேஸ்வரன்" தெரிவித்திருக்கும் கருத்து வேதனை அளிக்கின்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக 60வருடங்களாக போராட்டம் நடந்து வருகின்றது. இதில் எதிலாவது அவருக்கு பங்குண்டா? அரசியல் போராட்டமாக இருக்கட்டும் இல்லை ஆயுதப் போராட்டமாக இருக்கட்டும் அப்போது எங்கே போயிருந்தார் விக்னேஸ்வரன்? இறுதிக் கட்டப் போரில் கூட எந்த விதமான நன்மைகளையும் தமிழ் மக்களுக்கு அவர் செய்யவில்லை. ஒரு கடிதம் கூட வெளிநாடுகளுக்கு இவர் எழுதவில்லை.

இவருக்கு எப்படித் தெரியும் போராட்டம் என்றால் என்ன என்று? ஐயாவிற்கு தெரிந்தது கோவில் வாசலும் நீதிமன்ற வாசலும் தான். வேறு ஒன்றும் இவருக்குத் தெரியாது. இதில் உண்மை என்ன என்றால் இலங்கையில் தமது மண்ணுக்காக போராடிய போராளிகளுக்கு அதிகபட்ச தண்டனை கொடுத்தது ஐயா மட்டும் தான். அது போன்று அதிகப்பேரை சிறையில் தள்ளியதும் ஐயாதான்" எனப் பொழிந்து தள்ளியுள்ளார்.

இவ்வாறு கொதித்தெழுந்துள்ள "சீமானின்" கேள்விகளுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்போ அல்லது முதலமைச்சர் "விக்னேஸ்வரனோ" இதுவரை எந்த ஒரு பதிலையும் அளிக்கவில்லை. அவ்வாறு பதில்கள் அளிப்பது அவர்களது பழக்கமும் இல்லை.

தமிழர்களுடைய ஆயுதப் போராட்ட வரலாற்றில், பல போராட்ட இயக்கங்களின் உறுப்பினர்கள் தங்களது உயிர்களை தியாகம் செய்ததுடன் சிறைகளில் பல்வேறு துன்புறுத்தல்களையும் கொடுமைகளையும் அனுபவித்து இருக்கின்றார்கள். இவ்வாறு சிறைகளில் அடைக்கப்படுவதற்கு ஏதோ ஒரு வகையில் முதலமைச்சர்

# கே.வி. மகாதேவன் 33



- பி.ஜி.எஸ்.மணியன் -

"குங்குமம்" படத்திற்கு நடந்த கதைதான் அடுத்து வெளிவந்த "இரத்தத் திலகம்" படத்திற்கும்.

இந்திய - சீனப் போரின் பின்னணியில் கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் எழுதிப் பாடல்களையும் எழுதி இருந்தார்.

"பசுமை நிறைந்த நினைவுகளே" இன்றும் கல்லூரி வாழ்க்கை முடிவுறும் இறுதிநாளில் மாணவர்களின் மனோநிலையை துல்லியமாக பிரதிபலிக்கும் இந்தப் பாடலை வெல்ல இன்று வரை வேறு எந்தப்பாடலும் பிறக்கவே இல்லை.

"நான் நிரந்தரமானவன் அழிவதில்லை. எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை" - கவிஞரே காட்சியில் தோன்றி தன்னிலை விளக்கம் கொடுத்திருந்தார் "ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு" பாடலில். உமர் கய்யாமின் "அழகின் சிரிப்பு" கவிதையின் பிரதிபலிப்பாக அமைந்த இந்தப் பாடலுக்கு மகாதேவன் அமைத்த இசையும் டி.எம்.சௌந்தரராஜனைப் பாடவைத்திருக்கும் விதமும் கவிஞரே பாடல் காட்சியில் வாயசைத்து நடித்திருப்பதும் காலத்திற்கும் மறக்க முடியாதவை.

"புத்தன் வந்த திசையிலே போர்
புனித காந்தி மண்ணிலே போர்
சத்தியத்தின் நிழலிலே போர்
தர்மத் தாயின் மடியிலே போர்" - பாடலைக் கேட்பவர்களை வீறு கொண்டு எழவைக்கும் வகையில் கே.வி.மகாதேவனின் இசை இருக்கிறது. பாடலை குழுவினருடன் பாடியிருப்பவர் டி.எம். சௌந்தரராஜன்.

"தாழம்பூவே தங்க நிலாவே தலை ஏன் குனிகிறது" - கேள்வி பதில் பாணியில் அமைந்த ஒரு அருமையான டூயட் - டி.எம். சௌந்தரராஜன் - எல்.ஆர். ஈஸ்வரி. (படத்தில் இந்தப் பாடல் காட்சி இடம் பெறவில்லை.)

படம் என்னவோ தோல்விதான். ஆனால் பாடல்கள் இன்றும் பசுமையாக நிலைத்திருக்கின்றன.

"நீங்காத நினைவு" - எஸ்.எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, கல்யாண்குமார், புஷ்பலதா நடித்த படம். பாடல்கள் இப்போது கேட்டாலும் மனதை வருடத் தவறவில்லை.

"ஓஓ சின்னஞ்சிறு மலரை மறந்துவிடாதே. சிரித்துக்கொண்டே என்னை வருந்த வைக்காதே." - படத்தில் இருமுறை இடம் பெறும் பாடல் இது.

பி.சுசீலா- எல்.ஆர். ஈஸ்வரி பாடுவதாக ஒரு முறையும், டி.எம். சௌந்தரராஜனின் குரலில் இன்னொரு முறையும் பாடல் ஒலிக்கிறது. பஹாடியில் அமைந்த, முதல் முறை கேட்கும்போதே மனதை கொள்ளை கொள்ளும் மெட்டு.

"அன்பு வாழ்க ஆசை வாழ்க இன்பப் பண்பாடும் மனம் வாழ்க" - டி.எம்.எஸ். - சுசீலாவின் குரலில் சங்கராபரண ராகத்தின் அடிப்படை ஸ்வரங்களை கையாண்டு பாடலைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பாடலில் "ஆசை" என்ற வார்த்தையை டி.எம்.எஸ். உச்சரிக்கும் விதமே அலாதி.

இந்தப் படத்தில் இன்றளவும் மறக்கவே முடியாத பாடல் ஒன்று உண்டு என்றால் அது பி.சுசீலாவின் குளுமைக் குரலில் ஒலிக்கும் "எங்கிருந்த போதும் உன்னை மறக்க முடியுமா என்னை விட்டு உன் நினைவைப் பிரிக்க முடியுமா" - என்ற பாடல் தான். கீரவாணி ராகத்தைக் கச்சிதமாகப் பயன்படுத்தி காலத்தை வென்று நிற்கும் இந்தக் காவியப் பாடலைக் கொடுத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

"பெண் மனம்" - அமரர் லக்ஷ்மி எழுதி ஆனந்த விகடனில் வெளியாகி வாசகர்களின் மனத்தைக் கவர்ந்த நாவல்.

எல்.வி. பிரசாத் இந்த நாவலை "இருவர் உள்ளம்" என்ற பெயரில் திரைப்படமாகத் தயாரித்து இயக்கினார். கருணாநிதி திரைக்கதை வசனம் எழுத சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எஸ்.வி.ரங்காராவ், சந்தியா, எம்.ஆர்.ராதா, டி.பி. முத்துலட்சுமி, டி.ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் நடிக்க, பாடல்கள் கண்ணதாசன், இசை கே.வி. மகாதேவன்.




"பறவைகள் பலவிதம்" - படத்தின் ஆரம்பக் காட்சிப் பாடலை டி.எம். சௌந்தரராஜன் குரலில் மெலடியும் துள்ளலுமாகக் கொடுத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

ஏ.எல். ராகவன் - எல்.ஆர். ஈஸ்வரியின் குரல்களில் "புத்தி சிகாமணி பெற்ற பிள்ளை" - கரஹரப்பிரியா ராகத்தின் அடிப்படை ஸ்வரங்களை வைத்துக்கொண்டு நாட்டுப்புறப் பாணியில் கொடுத்திருக்கிறார்.

"கண்ணெதிரே தோன்றினாள்" - டி.எம். சௌந்தரராஜன் தனித்துப் பாடும் இந்தப் பாடலின் முகப்பிசையும் இணைப்பிசையும் பாடலை மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகின்றன.

ஒரே ராகத்தை ஒரே படத்தில் பாடல்களுக்கு பயன்படுத்தும் போது ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட விதத்தில் பயன்படுத்தி அசத்தி இருக்கிறார் கே.வி. மகாதேவன்.

அந்த வகையில் "கண்ணெதிரே தோன்றினாள்" பாடலை சங்கராபரண ராகத்தின் அடிப்படை ஸ்வரங்கள்ள வைத்துக்கொண்டு கொடுத்தவர் அதே ராகத்தின் அடிப்படையில் டி.எம்.எஸ். - பி. சுசீலா பாடும் "நதி எங்கே போகிறது கடலைத்தேடி" - பாடலையும் கொடுத்திருக்கிறார். ஆனால் இரண்டிலும் தான் எத்தனை வித்தியாசம்! முன்னதன் சாயல் துளிகூட இல்லாமல் அடுத்த டூயட் பாடல். அதுவும் அதே ராகத்தின் ஸ்வரங்களை வைத்துக்கொண்டு.

"நதி எங்கே போகிறது" பாடலில் வழக்கம் போல இணைப்பிசையில் வீணை, வயலின்கள் கோலோச்ச, பல்லவியில் பொங்கோஸ், சரணத்தில் தபேலா என்று பயன்படுத்தி விறுவிறுப்பான வகையில் பாடலைக் கொடுத்திருக்கிறார்.

விரும்பியவளைக் கைபிடித்த ஆண்மகனின் சந்தோஷத்தை "கண்ணெதிரே தோன்றினாள்" பாடலில் கொடுத்தவர், விருப்பமே இல்லாத மணவாழ்வில் நுழைந்த பெண்ணின் சோகத்தை "இதயவீணை தூங்கும் போது பாடமுடியுமா" பாடலில் கொடுத்திருக்கிறார். பி. சுசீலாவின் மயக்கும் குரலில் மென்மையான சோகரசம் ததும்பும் இந்தப் பாடல் "கரஹரப்ரியா" ராகத்தில்.

"கண்ணே கண்ணே உறங்காதே" - பி.சுசீலா.

"அழகு சிரிக்கின்றது" - டி.எம்.எஸ். - பி.சுசீலா.

"ஏன் அழுதாய் ஏன் அழுதாய்" - டி.எம்.எஸ். குரலில் சோகப்பாடல். என்று இருவர் உள்ளம் படத்தில் அனைத்துப் பாடல்களும் மெகா ஹிட் பாடல்கள் தான்.

படமும் வெற்றிபெற்றது. ஆனால் கதையை எழுதிய எழுத்தாளர் லக்ஷ்மிக்கோ தனது கதை சரியாகப் படமாக்கப்படவில்லை என்று வருந்தும் ஏமாற்றமும் ஏற்பட்டது.

என்ன செய்வது? நாவலைப் படமாக்கும்போது ஜனரஞ்சகத்துக்காக மாறுதல்கள் தவிர்க்கமுடியாதவைதானே.

(தொடரும்)

"விக்னேஸ்வரனும்" காரணமாக இருந்திருக்கின்றார் என்பது உண்மையே.

முள்ளிவாய்க்காலில் சனங்கள் செத்துக் கொண்டிருந்த போது இந்த முதலமைச்சர் மட்டுமல்ல தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் எங்கே போனார்கள் எங்கே இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

முள்ளிவாய்க்கால் முடிவுகள் வருவதற்கு முன்னர் அந்த முடிவுகளை தடுக்க ஏதாவது சிறிய அளவிலான ஒரு முயற்சியையாவது எடுத்தார்களா? ஆனால் தற்போது போலி வேஷம் இட்டு தமிழ்த் தேசியத்தின் காவலாளர்களாக தங்களை காட்ட முற்பட்டுக் கொண்டிருக்கும் இப் போலி நடிகர்களை நிஜமான நடிகரான திரைப்பட இயக்குநர் "சீமான்" கேள்வி கேட்கும்படி ஆகியிருக்கிறது.

பதில் எதுவும் "விக்னேஸ்வரன்" போன்றவர்களிடம் இருந்தால் சொல்லுங்கள் ஐயா நாங்களும் கேட்போம். போலி நடிகர்களான உங்களதும் நிஜ நடிகரான "சீமானினதும்" நியாயத் தன்மைகளை ஒரு தடவை சீர்தூக்கிப் பார்க்க எங்களது கூட்டமைப்புச் சிங்கங்களே! ஒரு தடவை வாய் திறவுங்கள்.

- வே.அர்ச்சுனன் -

# ஜெயமோகனின் வெண்முரசு பற்றி?



மூப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நிலைமை வேறு மாதிரி இருந்தது. அப்போது வாசகர்கள் என்றே யாரும் கிடையாது. சுமார் முன்னூறு பேர் எழுத்தாளர்கள். அவர்களே தான் வாசகர்கள். அவர்களே தான் விமர்சகர்கள். அவர்களே தான் பத்திரிகை ஆசிரியர்களும் பதிப்பாளர்களும் கூட.

ஞானக்கூத்தனை அசோகமித்திரன் திட்டுவார். அசோகமித்திரனை ந. முத்துசாமி திட்டுவார். ந. முத்துசாமியை சா.கந்தசாமி திட்டுவார். சா. கந்தசாமியை சுந்தர ராமசாமி திட்டுவார். சுந்தர ராமசாமியை தர்மு சிவராமு திட்டுவார். இவர்கள் எல்லோரையும் வெங்கட் சாமிநாதன் திட்டுவார்.

அடுத்து நாங்கள் வந்தோம். கோணங்கியை தமிழவன் விமர்சிப்பார். (ஆமாம், திட்டு என்பதற்கு பின்நவீனத்துவ கால கட்டத்தில் விமர்சனம் என்ற நாமகரணம் சூட்டப்பட்டு விட்டது.) தமிழவனை ராஜ் கௌதமன் விமர்சிப்பார். ராஜ் கௌதமனை நாகார்ச்சுனன் விமர்சிப்பார். நாகார்ச்சுனன்னை நான் விமர்சிப்பேன். என்னை எல்லோரும் விமர்சிப்பார்கள். இந்த நிலைமை இப்போது இல்லை. லட்சக் கணக்கில் வாசகர்கள் இல்லை என்றாலும் ஒவ்வொரு எழுத்தாளருக்கும் ஆயிரக் கணக்கான வாசகர்கள் இருக்கிறார்கள்.

உலகில் வேறு எங்கேயும் ஒரு எழுத்தாளரின் நாவலுக்கு இன்னொரு எழுத்தாளர் விமர்சகராக இருப்பதில்லை. அந்த வேலையை யார் செய்ய வேண்டும்? எத்தனை கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது? அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களும், சூர்யா, அஜித், சிம்பு, த்ரிஷா போன்ற நடிக நடிகைகளும், இயக்குனர்களும், மருத்துவர்களும், பொறியியலாளர்களும், நீதிபதிகளும், வக்கீல்களும், கருணாநிதி, ஜெயலலிதா, ப. சிதம்பரம் போன்ற அரசியல்வாதிகளும், சன் டிவி, விஜய் டிவி, ஜெயா டிவி போன்ற தொலைக்காட்சி சேனல்களும்தான் ஜெயமோகனின் வெண்முரசு பற்றிக் கருத்துச் சொல்ல வேண்டும்.

விகடன், குமுதம் போன்ற பத்திரிகைகளில் நாலு நாள் மட்டுமே ஓடக் கூடிய டப்பா படங்களுக்கெல்லாம் நாலு பக்கத்துக்கு கவரேஜ் கொடுக்கிறார்கள் அல்லவா? அந்தப் பத்திரிகைகள்தான் வெண்முரசுவுக்கு நாலு பக்கம் கவரேஜ் கொடுத்து ஜெயமோகனின் படத்தை அட்டையில் போட வேண்டும். வெண்முரசு பற்றி ஒரு ஞாயிற்றுக் கிழமை நீயா நானா நிகழ்ச்சி நடத்த வேண்டும். அதில் சிறப்பு அழைப்பாளர்களாக சமந்தா (அவருக்கு நன்றாகத் தமிழ் தெரியும். மெட்ராஸ் பொண்ணு), தமன்னா, ஜெனிலியா, காஜல், ஹன்ஸிகா போன்றவர்கள் வர வேண்டும்.

இப்படியெல்லாம் நடந்தால்தான் இதை ஒரு சுரணையுள்ள நாடு என்று சொல்ல முடியும். ஐரோப்பாவில் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருப்பினும் ஜெயமோகன், மனுஷ்ய புத்திரன், எஸ். ராமகிருஷ்ணன், சாரு நிவேதிதா எல்லோரும் ஒரே ஜாதி. எழுத்தாளர் ஜாதி. ஆங்கிலத்தில் Clan என்று சொல்லலாம். என் சகோதரனைப் பற்றி நான் கருத்து சொல்வதை விட ஊர் என்ன சொல்கிறது என்பதைக் கேட்பதே எனக்குப் பெருமை; என் சகோதரனுக்கும் பெருமை.

போகட்டும், இப்படியெல்லாம் இங்கே நடக்காவிட்டாலும் இன்னும் பத்து ஆண்டுகளில் ஜெயமோகனுக்கு பாரதீய ஞானபீடப் பரிசு கிடைக்கும் என்பது உறுதி.

- சாரு நிவேதிதா

# சின்னச் சின்ன...

## வைர 'வெயிற்'!

1901-ஆம் ஆண்டு ஹைதராபாத்தின் ஆறாவது நிஜாம் மகபூப் அலிபாச்சா கல்கத்தாவுக்குச் சென்றார். அங்கு பிரபல வைர வியாபாரி ஜேக்கப் என்பவரிடம் ஒரு வைரத்தை வாங்கினார். 18475 கரட் எடை கொண்ட ஜோக்கப்பின் வைரத்துக்கு நிஜாம் கொடுத்த விலை அந்தக் காலத்திலேயே 60 இலட்சம் ரூபாய்! ஜேக்கப் வைரம்தான் அப்போது உலகத்திலேயே மூன்றாவது பெரிய வைரமாக இருந்தது. நிஜாம் அதை என்ன செய்தார் தெரியுமா? "பேப்பர் வெயிற்"றாக பயன்படுத்தினார்.

## வித்தியாசமான பூனை!

இங்கிலாந்தில் கிறிஸ்டிஸ்பாரோ என்பவர் பூனை ஒன்றை வளர்த்து வந்தார். நாளடைவில் அதனுடைய முகம் ஹிட்லரைப்போல் மாறியது. மூக்கிற்கு கீழ் பகுதியில் தாடியைப் போன்று கறுப்புநிற முடி வளரத் தொடங்கியது. இதைக் கண்டு ஆத்திரமடைந்தவர் பூனையை அடித்து விரட்ட முயற்சித்தார். அடி வாங்கிய வேகத்தில் பூனைக்கு ஒரு கண்ணின் பார்வை பறிபோனது. வினோதமான இச்சம்பவத்தை டெய்லி மெயில் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

## வித்தியாச மனிதர்


சீனாவில் சிச்சுவான் பகுதியில் வசதியான நபர் ஒருவர், பெண்மணி ஒருத்தியை தனது தாயாக ஏற்று பராமரிக்க விரும்புவதாக அறிவித்திருக்கிறார். அப்பெண்மணி 57 வயதுள்ளவராகவும், மதுப் பழக்கத்திற்கு அடிமை இல்லாதவராகவும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்துள்ளார். அப்பெண்மணிக்கு 1,62,000 டொலர் பணம் அளிப்பதற்கும் சம்மதித்துள்ளார்.

## வினோத திருமணம்!

இந்தியாவிலுள்ள ஆந்திர மாநிலத்தில் ஒரு கிராமத்தில், கூட்டுத் திருமணம் நடைபெற்றது. மணப் பெண்களில் சிலர் கருவுற்றிருந்தனர் மணமகன்களில் சிலர் ஏற்கனவே கருத்தடை அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு இருந்தனர், சில, "புது" மணத் தம்பதியினரை சில சிறுபிள்ளைகள்... "அம்மா, அப்பா..." என்று அழைத்து, சிணுங்கி அழுதபடி இருந்தனர். இந்த விநோதத்திற்குக் காரணம்... அந்தக் கிராமத்தில், யாரிடமும் பண வசதி இல்லாததால், திருமணமாகும் முன்பே ஆணையும், பெண்ணையும் கணவன் - மனைவியாக வாழ அனுமதித்திருக்கின்றனர். திருமணம் செய்து கொள்ளக் கூடிய அளவுக்கு பணம் சேர்த்த பின், சம்பிரதாயப்படி கல்யாணம் செய்து கொள்கின்றனர்.

## பழமையான ஹோட்டல்!

உலகிலேயே மிகவும் பழமையான ஹோட்டல் ஜப்பானின் அவர்ஜீ என்னும் கிராமத்தில் இருக்கிறது.




ஹோஷி ரயோக்கன் (Hoshi Ryokan) என்ற பெயருள்ள இந்த ஹோட்டல் கி.பி. 717 ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகிறதாம். டைச்சோடைய்சி என்பவர் வெந்நீர் ஊற்றுகளுக்கு அருகே இந்த ஹோட்டலைக் கட்டினார். குணப்படுத்தும் இயல்புடைய இந்த வெந்நீர் ஊற்றுக்குளியல் ஹோட்டலில் உள்ள நூறு அறைகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது. வெந்நீர் ஊற்றுகள் அருகே உள்ள இந்த ஹோட்டலில் தங்கி ஆரோக்கியக்குளியல் எடுத்துக் கொள்ள என்றே உலகப் பயணிகள் வந்த வண்ணமாக உள்ளனர்.

## போலிப் பழமை!

லுசேங் சீனாவில் உள்ள அருங்காட்சியகம். இதில் வரலாற்று சிறப்பு மிக்க பொருட்கள் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. ஆனால் இங்கு இடம் பெற்றுள்ளவற்றில் 8000 போலியானவை என்று காவல்துறை கண்டு பிடித்துள்ளது. இச்செய்தி குளோபல் டைம்ஸ் என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது, அவற்றை வெளியேற்றி அழிப்பதற்கு சீன அரசு முடிவு எடுத்திருக்கிறது.

## முக்கோணச் சின்னம்!

திரைப்படங்களுக்கான சென்சார் சேர்ட்டிபிகேற்களை காட்டும் போது, பெரும்பாலும் ஒரு முக்கோணச் சின்னம், ஒரு மூலையில் காணப்படுவதைக் கவனித்திருப்பீர்கள். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? படத்தில் சில காட்சிகள் தணிக்கைக் குழுவால் வெட்டப்பட்ட பின் தான் திரையிட அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை குறிக்கவே, இந்த முக்கோணச் சின்னம் பதிக்கப்படுகிறது.

## கோப்பி நல்லது!

அறுபது வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் காலையில் ஒரு கப் கோப்பி குடிப்பது நல்லது. கோப்பியில் உள்ள கா.ஃபைன் முதியவர்களுக்கு ஏற்படும் ஞாபகசக்தி குறைவைத் தடுக்கிறதாம். போர்த்துகல் நாட்டு மருத்துவத் துறை விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவு இதைத் தெரிவிக்கின்றது. முதுமையில் ஏற்படும் அல்சிமிர் என்ற ஞாபகசக்தி குறைவு நோய் ஏற்படுவது 60 சதவீதம் தடுக்கப்படுகிறதாம்.

## கோப்பி மிட்டாய்!

எத்தியோப்பியரிடம் கோப்பிக் கொட்டையை மென்று தின்னும் பழக்கம் உண்டு. கோப்பித்தூளை வெண்ணெய்யுடன் பிசைந்து, உருண்டைகளாக உருட்டி பயணம் செய்யும்போது நொறுக்குத் தீனி போல உண்ணுவார்கள்.

## பெண்களே பூசாரி!

முழுக்க முழுக்க பெண்களே பூசாரிகளாக இருக்கும் கோயில் இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ளது. "பஞ்சுபராஹி" என்னும் கோயிலில் ஆண்கள் யாரும் கருவறைக்குள் நுழையக் கூடாது. தாலோமி என்ற மீனவப் பெண்களே கோயில் வழிபாடுகள் அனைத்தையும் செய்து வருகிறார்கள்!

## முரண்பாடு!

சமாதானத்திற்கான நோபல் பரிசை அதிகம் பெற்றவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களே. ஆனால், உலகில் நடக்கும் யுத்தங்களில் அமெரிக்காவே பெரும் பங்கு வகிக்கிறது.





வவுனியா தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற வவுனியா சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்களின் சிறுவர் விழாவில் தமிழ்ச்சங்கத் செயலாளர் தமிழருவி த.சிவ குமாரன் உரையாற்றுவதையும் வேப்பங்குளம் இந்து அன்பகச் சிறுவர்களின் "நீர்வளம் காப்போம்" வில்லிசை நிகழ்வையும் காணலாம். (40,70)




மானிப்பாய் றோட்டரக்ட் கழகமும், யாழ் நகர் மைய றோட்டரக்ட் கழகத்துடன் இணைந்து தெல்லிப் பளை வைத்தியசாலையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட சிரமதான நிகழ்வு... (48)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வதிரி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வாக கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது. (18)





வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டபோது.... (18)



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையில் வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவினால் கலாசார விழிப்புணர்வு சம்பந்தமாக நடாத்தப்பட்ட வீதிநாடகக்காட்சி... (63)

ஜனாதிபதி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு அச்சுவேலி முழக்கன் சந்தியில் மரம் நாட்டும் நிகழ்வு அண்மையில் ஈ.பி.டி.பி. அச்சு வேலி பொறுப்பாளர் தர்மராசா தலைமையில் நடைபெற்றபோது... (85)

# நிகழ்வுகளின் பதிவுகள்....




ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டு முல்லைமாவட்ட அரச அதிபர், மற்றும் இராணுவத்தளபதி மாவட்ட அரச அதிகாரிகள் ஆகியோர் இணைந்து பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஆசிர்வாதம் வேண்டி பு,சை வழிபாடுகளை மேற்கொண்டனர். (40)

# வலி.தென்மேற்கு பிரிவிற்கு வைத்திய நிலையம் வேண்டும்

## சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது

நவாலி மானிப்பாய் பிரதேச மக்களின் "கால்நடைவளர்ப்பு நன்மை கருதி கால்நடை வைத்திய பணிமனை ஒன்றை நவாலியில் உருவாக்கி தரவேண்டும்.

இவ்வாறு நவாலியில் உள்ள பொது அமைப்பொன்று வடமாகாண கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாண பணிப்பாளரிடம் கோரியுள்ளது.

மேற்படி விடயமாக மேலும் தெரிவிக்கையில்:


மானிப்பாய், சமூக சுகாதார சுற்றாடல் விவகார குழு தலைவர் சட்டத்தரணி இரா. வசந்த சேனன் தனது சொந்தக் காணி 2 பரப்பினை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் அமைப்பதற்காக இலவசமாக வழங்கியுள்ளார்.

இக்காணி வழங்கப்பட்டது முதல் இன்றுவரை எதுவித கால்நடைவளர்ப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் எவையுமின்றி உள்ளது.

தற்போது மானிப்பாய் பிரதேச சபையின் ஒரு பகுதியில் எவ்வித வசதியுமின்றி மேற்படி கால்நடை உற்பத்தி சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது.

எனவே சட்டத்தரணி வசந்த சேனனின் உயரிய நோக்கத்தின் அடிப்படையில் வழங்கிய காணியில் 2015இல் வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 14 கிராம அலுவலர்பிரிவு மக்கள் நன்மை அடையக் கூடியதாக கால்நடை உற்பத்தி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை உருவாக்கி இப்பிரதேச மக்களின் கால் நடை உற்பத்தி அதிகரிப்பிற்கு வழியமைத்து உதவுமாறு நவாலி பொது அமைபொன்று மாகாண பணிப்பாளரை கோரியுள்ளது.

மேற்படி திட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு கோரி கடந்த வலி.



தென்மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான மு. சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு உடனடியாக மகாணப்பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தமை தெரிந்ததே.

# பயன்தரு மரங்கள் நாட்டல்



மரநடுகை மாதத்தை முன்னிட்டு தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தினால் பயன் தரு மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டன.

பயன்தரு மரக்கன்றுகள், நிழல் மரங்கள் உள்ளிட்ட பல மரங்கள் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.பிரதீபன், வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.தேவகரன், யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் எஸ்.விஜிதரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனன் மற்றும் இளைஞர் கழக அங்கத்தவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# வரணி பொதுச்சந்தையின் அவல நிலை தீருமா?

(தென்மராட்சி)

சாவகச்சேரிபிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வரணிப் பொதுச்சந்தையில் கடலுணவு விற்பனை செய்யும் கட்டடம் மேற்க் கூரைப்பகுதி மோசமாக ஓடுகள் அற்ற நிலையில் உள்ளதால் கடலுணவுகளை விற்பனை செய்வோர் மழை நேரங்களில் பெரும் இடையூறுகளை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று மற்றய கட்டடமும் (வெற்றிலைக்கடை) கூரையும் மோசமான நிலையிலேயே மழை நேரங்களில் காட்சி அளிக்கின்றது. இக்குறைபாடுகள் தொடர்பாக உரியவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளீர்களா என்று வியாபாரிகளிடம் கேட்டதற்கு பலதடவைகள் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் ஆக்கபூர்வமான எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்ற னர்.

சுமார் ஒரு வருடத்திற்கு மேலாகியும் சந்தை வாசல்(கேற்) பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாகவும் அதனைக்கூட புனரமைப்பு செய்து தரவில்லை எனவும் இதனால் சந்தை கட்டாக்காலி ஆடு, மாடுகள் உறங்குமிடமாகவும் விளங்குவதாக குற்றம் சுமத்தும் வியாபாரிகள் பத்திரிகைகள் பலமுறை இக்குறைகளை வெளிப் படுத்தியும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என விடையத்தில் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே இனியாவது அச்சந்தை விடயத்தில் உரியவர்கள் கவனமெடுத்து வியாபாரிகளின் இடையூறுகளை நீக்கமுன்வரவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (150)

# வீதியை புனரமைக்க கோரிக்கை

மூளாய் தெற்கு நல்லதம்பி கடைக்கு அருகாமையில் செல்லும் வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பின்றி காணப்படுகின்றது.

குறித்த வீதி குண்டும் குழியமாக போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காட்சியளிக்கின்றது. இதனால் வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் எனப் பலரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தை மேற்கொள்வதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி தற்போது மழைகாலமாதலால் வீதியில் போக்குவரத்துச் செய்வது பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுக்கும் செயல் என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த வீதியினை சம்பந்தப்பட்டவர்கள் புனரமைத்து பயணிகள் போக்குவரத்தை இலகுபடுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# தொழில்வாய்ப்பும் பரீட்சைகளும்

## இலங்கை சேமிப்பு வங்கி

முழுமையாக இலங்கை அரசுக்குச் சொந்தமான உரிமம் பெற்ற விசேட வங்கியான இலங்கை சேமிப்பு வங்கியின் இலட்சிய கண்ணோட்டத்தை எய்துவதற்கு வழிநடத்த ஒரு திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய சாதனை நோக்குடைய துடிப்பு மிகுந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து வங்கியின் பின்வரும் பதவி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**உதவி முகாமையாளர்கள் :**

பட்டதாரிப் பட்டம் அல்லது சமமான தொழில்சார் தகைமையுடனான வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் பதவியில் 3 வருடங்கள் உட்பட்ட 10 வருட பட்டபின் தகைமையுடனான அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டதாரிப் பட்டம் அல்லது சமமான தொழில் தகைமை மற்றும் வங்கியொன்றின் அல்லது நிதிநிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமையாளர் 3 வருடங்கள் உட்பட 12 வருட பட்டப்பின் தகைமையுடனான அனுபவம்

அல்லது

வங்கித் துறையில் டிப்ளோமா மற்றும் நிதி அல்லது வங்கி முகாமைத்துவத்தில் டிப்ளோமாவுடன் வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமையாளர் பதவியில் 3 வருடங்கள் உட்பட்ட 14 வருடங்கள் அனுபவம்.

**உதவி முகாமையாளர்கள் :** (இணக்கம்)

LLB அல்லது சட்டத்தரணி மற்றும் வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் 4 வருடம் முறைப்பாட்டு நடவடிக்கைகளை வெளிப் படுத்துகின்ற பட்டப்பின் அனுபவம்.

அல்லது AIB அல்லது வங்கி முகாமைத்துவ டிப்ளோமா உடன் வங்கி, நிறுவனத்தின் முறைப்பாட்டு நடவடிக்கைகள் வெளிப்படுகின்றன 6 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வங்கி உதவியாளர்கள் :**

க.பொ.த. உயர்தரத்தில் குறைந்த 2 சாதாரண சித்திகளோடு தமிழ்/சிங்களம் கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக க.பொ.த. சாதாரண தரத்தில் 5 சாதாரண சித்திகள். விண்ணப் பதாரிகள் கணனி அறிவுடையவராகவும் 24 வயதிற்குட்பட்டவராகவும், மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான செல்லுபடியாகும் சாரதி உரிமமும் இருத்தல் வேண்டும்.

**முகாமையாளர்:**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது நிறுவனத்தில் பட்டப்படிப்பை அல்லது அதற்குச் சமமான தொழில் தகைமையை பூர்த்தி செய்த ஒரு வங்கியில் 2 வருட கிளை அனுபவத்துடன் கூடிய 5 வருட கால பிற்தகைமை அனுபவத்தைப் பெற்றிருக்கும் சுய ஊக்கமுள்ள இலக்குகளை அடையக்கூடியதாக இருத்தல்.

அல்லது ஒரு வங்கியில் 7 வருட அனுபவத்துடன் 15 வருட கால அனுபவத்துடன் அதில் 2 வருடங்கள் ஒரு கிளையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். வங்கி முகாமைத்து வத்தில் டிப்ளோமா சான்றிதழ். அல்லது க.பொ.த. உயர்தரத்துடன் ஒரு வங்கியில் 15 வருட கால அனுபவத்துடன் அதில் 5 வருடங்கள் ஒரு கிளையில் முகாமைத்து தரத்திலான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கடன் அறவீட்டு அலுவலர்கள் :**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழத்தில் / நிறுவனத்தில் பட்டப் படிப்பு அல்லது அதற்குச் சமமான தொழில் தகைமையை ஒரு வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் பட்டப்பின் படிப்பு அதற்குச் சமமான தொழில் தகைமை. ஒரு வங்கியில் கடன் அறவீட்டுத் துறையில் 3 வருடத்திற்கான பட்டப்பின் அனுபவத்தைப் பெற்றிருப்பதோடு சட்ட விடயங்களில் அறிவைப் பெற்றிருத்தல்.

**உதவி முகாமையாளர்கள் :**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் / நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டம் அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடன் வங்கியின் கிளை / கடன் பிரிவில் 2 வருட பட்டப் பின் அனுபவத்துடன் கூடிய 4 வருட பட்டப்பின் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது வங்கியில் / கடன் பிரிவில் 2 வருட அனுபவத்துடன் கூடிய 6 வருட அனுபவத்துடன் AIB/வங்கி முகாமைத்துவத்தில் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

**கடன் அதிகாரிகள் :**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் / நிறுவனத்தில் பட்டப் படிப்புடன் அல்லது அதற்குச் சமமான தொழில் தகைமையுடன் ஒரு வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் வர்த்தக ரீதியான கடன் வழங்கல் / குத்தகை சம்பந்தப்பட்ட விடயங்களை கையாள்வதில் 3 வருடகால தகைமை கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி, சூ 265, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு

அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் மொழி உத்தியோகத்தர்கள், இணைப்பு உதவியாளர்கள், சாரதிகள், காரியாலய உதவியாளர்கள் போன்ற பதவி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் தலைவர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, 95 ஆனந்த ராஜ கருணா மாவத்தை கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தொகுப்பு:- சி.என்.எச். சாலிஸ்

# அரசியல் மயமாகிறது ஐ.நா. அங்கே நம்பகத்தன்மை கேள்விக்குறி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் நம்பகத்தன்மை குறித்து இலங்கை அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கை தொடர்பிலான விசாரணைகளை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த விசாரணைகளின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நடுக்ள் அமைப்பிற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி டாக்டர் பாலித கொஹணே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 69ம் அமர்வுகளின் மூன்றாம் கமிட்டி கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை கிரமமான முறையில் கடுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளதோடு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை பக்கச்சார்பான முறையில் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




**யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தாய் நாட்டின் தீர்ப்பு மகிந்த என தமிழ் மொழியிலும் ஜெய ஸ்ரீ மகிந்த என சிங்கள மொழியிலும் இத் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.**



## பரமர் சங்கமம்

'பச்சைத் தண்ணியிலை பலகாரம் சுடுறேண்டது பழைய பழமொழி அதுக்குப் புதுமொழி என்ன தெரியுமே? சுடுதண்ணீரில பலகாலம் சுடுறே" என்பது தான் அதில என்ன புதுமை இருக்கெண்டே கேக்கிறியள் சொலலுறனெ பழயுங்க.

கடந்த 16 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் பூமணி சிறுவர் கவிதைகள் நூல் வெளியீட்டு அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டு நிண்டவேளை ஒருவர் வந்து தன்னை லேக்ஹவுஸ் புத்திரிகை பிராந்தியச் செய்தியாளர் என்று அறிமுகம் சொன்னார்.

நல்லது படங்களையும் எடுத்துச் செய்திகளையும் வடிவா எழுதி அனுப்பும் அங்க உள்ளவையெல்லாம் என்ரை நண்பர்களெண்டு பெயர்களையும் சொன்னன். அடுத்தாப்போல் கேட்டார் மங்கல விளக்கேற்றுபவர்களில் தன்ரை பேரையும் எழுதிக் கொள்ள சொன்னார்.

அதுக்கெல்லாம் ஆக்கள் ஏற்பாடு செய்தாச்செண்டதும் தன்ரை விசிற்றிங்காட்டோடை விலாச அட்டையெண்டு சொல்லுமே அதையும் தந்து சாமஸ்ரீ தேசமானிய...லயன்... அகில இலங்கை சமாதான நீதவானெண்டு நீட்டினார்.

அதொண்டையும் நான்பொருட்படுத்தவில்லை. சிறப்புப் பிரதி பெறுபவர்களில் தன்ரை பேரையும் எழுதும்படி கேட்டார் அதற்கிசைந்து பெயரைக் கேட்டு எழுதும் பொழுதும் மேற்சொன்ன பட்டங்களையும் எழுதக் கேட்டுக் கொண்டார் அதில் சமாதான நீதவான் எண்டதை மட்டும் குறிச்சுக் கொண்டேன்.

முதற்பிரதி பெற்றுக் கொண்டதை அடுத்துச் சிறப்புப் பிரதிகள் பெறுபவர்களை அழைக்கையில் இவரது பெயரே முதலில் வாசிக்கப்பட்டது கடைசி நேரத்தில் பகிந்தால் முதலில் அழைக்கப்பட்டார். நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனிடம் இருந்து சிறப்புப் பிரதி வாங்க வந்தவர் வெறும்கையோடை வந்து பிரதியைப் பெற்றுக் கொண்டு சென்றார் என்முகதாவில் இவ்வளவும் நடைபெற கூர்மையாகக் கவனித்துக் கொண்டேன.

எதற்காகவோ மண்டபத்துக்கு வெளியே வந்த என்னை நாடி மேற்படி நபர் வந்தார். விடுவேனா நான் ஏன் காசு வைக்காமல் பிரதியை எடுத்தனி எண்டு தாறுமாறாப் பேசி வெளியே போ எண்டு துரத்திவிட்டன்.

விழா முடிஞ்சு அடுத்தநாள் என்ரை பேசில் அவற்றை விலாச அட்டை அகப்பட்டிச்சு. அதில் ஜெயசங்கர் சமூக அபிவிருத்திச் சேவை என்னும் தலைப்பின் கீழ் அவருக்கு இதுவரை கிடைச்சபட்டங்கள் பொறிச்சு கரம்பைக் குறிஞ்சு வரணி எண்ட விலாசமும் தரப்பட்டிருந்தது.

'பல்லாயிரம் ரூபா செலவழிச்சு அச்சிட்டு நூலை வெளியிட்டால் உப்புழுப் புல்லுருவிகள் வந்து உருவிக் கொண்டு போனாச் சூடேறாதை அப்ப சுடு தண்ணிதானை அதிலேம் பலகாரம் சுட்டுப்போடுறாங்களே சில ஆக்கள் சொல்லுங்க பாப்பம்...

# வரவு செலவுத்திட்டம் மீது இன்று வாக்கெடுப்பு

## பரபரப்புக்கு பஞ்சம் இல்லை



(கொழும்பு)

நாடாளுமன்றில் இன்று 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளதால் தெற்கு அரசியலில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்ரிபால சிறிசேன அரசாங்கத்திலிருந்து விலகி ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை எதிர்த்து எதிர்வரும் ஜனவரி எட்டாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்த நிலையிலே இந்த வாக்கெடுப்பு இடம் பெறவுள்ளதாலேயே இது குறித்து அனைவரினதும் கவனமும் திரும்பியுள்ளது.

அரசாங்கத்தை விட்டு வெளியேறிய அமைச்சர் மைத்ரிபால மற்றும் அவருடன் வெளியேறிய ஆறு உறுப்பினர்களும், கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் இன்று முதன்முறையாக நாடாளுமன்றில் எதிர்கட்சி ஆசனங்களில் அமரவுள்ளனர். அதே வேளை இவர்கள் இன்று இடம் பெறவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிராக வாக்களிக்கக் கூடிய வாய்ப்புகளே அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மைத்ரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதாக உறுதியளித்துள்ள ஆளும் கூட்டணியைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களும் ஆளும்கட்சியில் இருந்து வெளியேறி எதிரணியில் இணைந்து கொள்ளலாம் என்றும் எதிர்பார்க்கப்படுவதால் இன்றைய வாக்கெடுப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தநிலையில் எதிர்கட்சிகளின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க ஐக்கிய தேசியக் கட்சி வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராகவே வாக்களிக்கும் என்று அறிவித்துள்ளது மாத்திரமன்றி வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பது சாத்தியப்படுவது என்பது சந்தேகமே என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளார். வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதால் எழக்கூடிய அரசியல் யாப்பு மற்றும் சட்ட சிக்கல்கள் குறித்து கவனம்செலுத்தியுள்ளதாகவும் கூறிய ஜோன் அமரதுங்க, எனினும் அனைத்து வாய்ப்புகளுக்குமான கதவுகள் திறந்தே இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றில் ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு உறுப்பினர்கள் மற்றும் எதிரணியில் இணைந்து கொண்ட ஆளும் கட்சியைச் சேர்ந்த ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தவிர்த்து ஆளும் கட்சிக்கு 152 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னமும் இருக்கின்றனர்.

கடந்த இரண்டாம் திகதி இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்திற்கான இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருந்தனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஜனநாயகக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 57 நாடாளுமன்ற உறுப் பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். எனினும் ஆளும் கட்சி சார்பில் 157 வாக்குகள் கிடைக்கப் பேற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## நீங்கா நினைவுகள் நூல் அறிமுகவிழா

தமிழ்த்தொண்டர் ஐ.தி.சம்பந்தனின் "நீங்கா நினைவுகள்" நூல் அறிமுக விழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடமாகாண சபை முதல் அமைச்சர் முன்னாள் நீதிபதி சி.வி.வக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார் நூல் ஆய்வுரை கவிஞர் சோ.பத்மநாதன் வெளியீட்டுரை கலாநிதி வீரமங்கை யோகரட்ணம், வாழ்த்துரை மாவை சேனாதிராசா, (பா.உ.)வரவேற்புரை பண்டிதர் க.வேலாயுதப்பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளனர் சிறப்பு விருந்தினராக ஈ.சரவணபவன் (பா.உ) செல்வம் அடைக்கலநாதன் (பா.உ), கௌரவ விருந்தினராக, த.சித்தார்த்தன் (வ.மா.ச) பா.கஜ தீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தேர்தலுக்காக தயாராகிறது யாழ்.தேர்தல்கள் திணைக்களம்

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக அரச ஊழியர்களிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இதற்கான அலுவலர் கணிப்பீட்டுப் படிவங்கள் சகல அரச ஊழியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் இக்கணிப்பீட்டுப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுவது அரசாங்க ஊழியர்களின் கட்டாயசேவை என்பதால் தேர்தல் கடமைகளில் ஈடுபட முடியாதவர்கள் அதற்கு தகுந்த கட்டணம் சமர்ப்பிக்கப்படல் வேண்டு மெனவும் வேண்டப்பட்டுள்ளது. (10)

# சுகாதாரத் திணைக்களத்திற்கு ஆளுநரால் வாகனம் கையளிப்பு




(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு நடமாடும் புனர்வாழ்வு பிரிவு வாகனம் ஒன்று கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி நடமாடும் புனர்வாழ்வு பிரிவு வாகனத்தினை கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கார்த்திகேயனிடம் கையளித்தார்.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.திருமதி .எஸ்.ஆர்.யூட் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.


இவ்வாகனம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று அங்கு செயற்கை அவயவங்களை பொருத்தியுள்ள மக்களுக்கு அவ் அவயவங்களை திருத்தியமைக்க பயன்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(07) இடைவெளியை நிரப்புக

01. சுண்ணாம்புக்கல்லை பயன்படுத்தி ........................................ தயாரிக்கப்படும்.
02. அரிசியில் இருந்து கல்,மண் நீக்குவதற்கு ........................................ பயன்படும்.
03. ........................................ பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும்.
04. ........................................ வட்டவடிவ இலையாகும்.
05. கறையான் புற்றுக்குள் ........................................ வாழ்கின்றது.
06. ........................................ கிளையற்ற தாவரமாகும்.

| அரிக்குஞ்சட்டி, வெண்கட்டி, பாம்பு, தென்னை, ஒட்டகம், தாமரை |
|---|

(08) தாவரத்தின் பகுதியை குறித்துக்காட்டுக



1) ....................
2) ....................
3) ....................
4) ....................

(09) சுருக்கமான விடை தருக

1. இலங்கையின் தேசியக்கொடியில் உள்ள பிராணி எது?
........................................
2. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு எது?
........................................
3. தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடும் இனத்தவர்கள் யாவர்?
........................................
4. புதிய 20 ரூபா காசுத்தாளில் உள்ள பறவை எது?
........................................
5. செவ்வரத்தம்பூ எத்தனை இதழ்களை கொண்டது?
........................................
6. தலதாமாளிகை அமைந்துள்ள நகரம் எது?
........................................
7. விறகு பிளப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
........................................
8. பணத்தை வைப்பிலிட நாம் செல்ல வேண்டிய இடம் எது?
........................................
9. திருக்குறளை இயற்றியவர் யார்?
........................................
10. இஸ்லாமியரின் புனிதநூல் எது?
........................................

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்.



## தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



01) மிகச்சரியான விடையை தெரிந்து கோடிடுக.

01) தேசியக்கொடியில் இல்லாத நிறம் எது?
01) செம்மஞ்சள் 02) பச்சை 03) நீலம்

02) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
01) C.W.W.கன்னங்கரா 02) டி.பி.ஜயத்திலக்க 03) ஆனந்த சமரக்கோன்

03) நத்தாரப்பண்டிகை எந்த மாதத்தில் கொண்டாடப்படும்?
01) ஜனவரி 02) டிசம்பர் 03) ஏப்ரல்

04) சோறு சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் வித்து எது?
01) சோளம் 02) கோதுமை 03) நெல்

05) நாம் சுவாசிக்க பயன்படும் வாயு எது?
01) காபனீரொட்சைட் 02) நைதரசன் 03) ஒட்சிசன்

06) அதிகளவு வீபத்து ஏற்படும் இடம் இது?
01) மைதானம் 02) வகுப்பறை 03) நூலகம்

07) 2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் எது?
01) புயற்காற்று 02) சுனாமி 03) மண்சரிவு

08) கொம்பினால் எதிரியை தாக்கும் பிராணி எது?
01) ஆடு 02) குதிரை 03) யானை

09) வேகமாக வீசுகின்ற காற்றை எவ்வாறு அழைப்போம்?
01) தென்றல் 02) பருவக்காற்று 03) சூறாவளி

10) சரியான முறையில் வரையப்பட்டுள்ள தேசியக்கொடி எது?


1)  2)  3) 

11) கூடுதலான அளவு சக்தி விரயமாகும் விளையாட்டு எது?
01) கரம் 02) தாயம்போடுதல் 03) கபடி

12) விரைவாக பழுதடையக்கூடிய உணவுப் பொருள் எது?
01) லட்டு 02) பால் 03) கேக்

13) உப்பிட்டு காயவைத்து பேணப்படும் உணப்பொருள் எது?
01) மீன் 02) மரவள்ளி 03) இறைச்சி

14) தூய நீரின் இயல்பு யாது?
01) மணமுண்டு 02) நிறமுண்டு 03) சுவையில்லை

15) 
இவ்வுருவில் காணப்படும் இசைக்கருவி யாது?
01) நாதஸ்வரம் 02) புல்லாங்குழல் 03) கொம்பு

16) தேனீர் தயாரிக்கும் போது சுவையூட்ட பயன்படுத்தப்படுவது?
01) இஞ்சி 02) மிளகு 03) சாதிக்காய்



17) இலவசக்கல்வியின் தந்தை என அழைக்கப்படுவர்?
01) டி.எஸ்.சேனநாயக்க 02) C.W.W.கன்னங்கரா 03) ஆனந்தகுமாரசுவாமி

18) பௌத்தரின் சமய சின்னம் யாது?

1)  2)  3) 

19) இலங்கையில் அதிகளவில் ஏற்படும் விபத்து எது?
1) தீ விபத்து 2) வெள்ளம் 3) வாகன விபத்து

20) முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் பிராணி எது?

21) தேனையும்,தேனீக்களையும் விரும்பி உண்ணும் பிராணி எது?
1) கரடி 2) பன்றி 3) எலி

22) பூமியை சுற்றி வலம் வரும் துணைக்கோள் எது?
1) புதன் 2) சனி 3) சந்திரன்




23) இலங்கை எத்தனை மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது
1) 25 2) 9 3) 16

24) ஊசித்துளை கமரா ஒன்றின் ஊடாக மரம் ஒன்றை பார்த்தால் தோன்றும் விதம்

 2)  3) 

25) மருந்துக்கு பயன்படுத்தும் தாவரம் எது?
1) வேம்பு 2) நித்தியக் கல்யாணி 3) மரவள்ளி

(02) தாவர இலைகளின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக

1)  2)  3)  4) 

மரவள்ளி, ஆமணக்கு, புளி, வேம்பு

(03) பாடலில் கூறப்பட்டுள்ள பிராணியின் பெயரை புள்ளிக்கோட்டில் எழுதுக.

05. உற்றார் உறவினர் அனைவரையும்
உண்ண அழைத்து உண்டிடுமே
செத்தால் ஒன்று அவைகளிலே
சேர்ந்து யாவும் அழுதிடுமே அது என்ன? .....................

06. கழுத்தை நீட்டி கூவிடுமே
காலைப் பொழுதில் சிறகடித்தே
எழுந்திடு... விழித்திரு...
எழுப்பி தூக்கம் ஓட்டிடுமே அது என்ன? .....................



(04) சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடையாளமிடுக

01. கிவி நீண்ட அலகை கொண்ட பறவையாகும் ( )
02. விமானம் மூலம் வேறு நாடுகளுக்கு பயணம் செய்யலாம் ( )
03. தாவரங்களின் வளர்ச்சிக்கு சூரியஒளி அவசியமாகும் ( )
04. ரோசா,மரவள்ளி என்பன வித்து மூலம் இனம் பெருகும் ( )
05. நாம் உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் ( )
06. மத்தள என்னும் இடத்தில் சர்வதேச விமானநிலையம் அமைந்துள்ளது ( )
07. குழாய்நீர் எமக்கு கிடைக்கும் இலவச சேவையாகும் ( )
08. மழைநீர் எப்பொழுதும் மேட்டு நிலத்தை நோக்கி பாயும் ( )

(05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக


01. வயலை உழுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது? ...........................
02. முட்டை, இறைச்சி என்பவற்றை தரக்கூடிய பிராணி எது? ...........................
03. தேசியக்கொடி அரைக்கம்பத்தின் பறக்கவிடும் சந்தர்ப்பம் எது? ...........................
04. வீதிச்சமிக்ஞை விளக்கில் நிறுத்துக என்பதை குறிக்கும் விளக்கின் நிறம் ...........................
05. சமாதானப்பறவை எது? ...........................
06. இயற்கைத்துறைமுகம் அமைந்துள்ள இடம் எது? ...........................
07. தண்டவாளத்தில் பயணம் செய்யும் போக்குவரத்துச்சாதனம் எது? ...........................
08. ஆடையில் தீப்பிடித்து ஒருவர் உடனடியாக செய்ய வேண்டியது? ...........................
09. ஹஜ் பெருநாள் கொண்டாடும் இனத்தவர்கள் யார்? ...........................
10. இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள நகரம் ஒன்றை எழுதுக? ...........................
11. தாவரங்கள் மூலம் நாம் பெறும் பயன் ஒன்று தருக? ...........................

12. தொலைவில் உள்ள பொருட்களை பெரிதாக்கி பார்க்க உதவுவது எது?
1) தொலைநோக்கி 2) கைவில்லை 3) ஊசித்துளைகமரா

13. இலங்கை மக்களின் பிரதான உணவு எது?
1) பாற்சோறு 2) நெல்லரிசிச்சோறு 3) பாண்

14. பின்வருவனவற்றில் புரத உணவுகள் எவை?
1) சோறு, மரவள்ளி 2) வெண்ணெய்,கரட் 3) மீன்,பருப்பு

15. வெற்றிலையை குறிக்கும் உரு எது?

1)  2)  3) 

16. இலையின் ஓரத்தில் பல்போன்ற அமைப்பு காணப்படும் தாவரம் எது?
1) வேம்பு 2) எலுமிச்சை 3) மிளகு



17. பெரிய மரமாக வளர்வது
1) ஆலமரம் 2) வாழை 3) பருத்தி

18. சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் பூ எது?
1) செவ்வந்திப்பூ 2) புளியம் பூ 3) வாழைப்பூ

19. எட்டுக்கால்களை கொண்ட பிராணி எது?
1) சிலந்தி 2) பூரான் 3) இறால்

20. வீதியை கடக்கப்பயன்படும் வீதிக்கடவையின் நிறம் யாது?
1) கறுப்பு 2) சிவப்பு 3) மஞ்சள்

(06) படத்தில் காட்டப்பட்டுள்ள பிராணிகளின் பெயர்களை எழுதுக

(1) (2) (3) (4)

# உலக அமைதி வேண்டி இரவுபகலாக திருமுறை ஓதல்

(யாழ்.நிருபர்)

உலக அமைதி வேண்டியும், தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு வேண்டியும் பன்னிரு திருமுறை, கந்தபுராணம், திருப்புகழ் முற்றோதலும் சிவமூல மந்திரம் உச்சரித்தலும் ஆகிய நிகழ்வுகள் சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோவிலில் கடந்த சனிக்கிழமை ஆரமபிக்கப்பட்டு இரவு பகலாக இடைவிடாது தொடர்ந்து ஓதப்பட்டு வருகிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை வரை திருமுறை ஓதும் நிகழ்வு தொடர்ந்து நடைபெறவுள்ளதோடு அன்றைய தினம் அகண்ட நாம கூட்டுப்பிரார்த்தனையும் திருமுறைபோற்றி 1008 அர்ச்சனையுடன் நிறைவு பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓதுவார்கள், சைவ சமய நிறுவனங்கள் மற்றும் சைவ மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (10)

# வரி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்து

(யாழ்.நிருபர்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வரிசெலுத்துநர்கள் 2013/2014 ஆம் வரி மதிப்பீட்டு ஆண்டுக்குரிய வரியினைச் செலுத்தி நவம்பர் 30/2014 அன்றோ அதற்கு முன்னரோ வருமான வரி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்கள பொறுப்பு உதவி ஆணையாளர் எஸ்.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தகவல் தருகையில்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வரி செலுத்துநர்களின் நன்மை கருதி எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திலும், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்க முடியும்.

அத்துடன் ஏனைய பிராந்திய அலுவலகத்திலோ, கொழும்பு காரியாலயத்திலோ வரிகோவைகளைப் பேணுபவர்களும் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், விபரத்திரட்டுக்களுடன் அதனைப் பூரணப்படுத்துவதற்கான ஆவணங்களையும் எடுத்து வரவேண்டும்.

அத்துடன் முன்னைய வருடங்களுக்குரிய வருமானவரி விபரத்திரட்டுக்கள், தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி விபரத் திரட்டுக்கள் என்பன சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அவற்றையும் சமர்ப்பித்துக்கொள்ள முடியும் என்பதுடன், புதிய வரிக் கோவைகள் திறக்க விரும்புவோரும், வரி தொடர்பான விளக்கங்கள் பெற விரும்புவோரும் சமூகம் அளிக்கலாம் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.



கரணவாய் தேவரையாளி பாடசாலை வீதி, போக்குவரத்துக்கு உதவாத நிலையில் புனரமைப்பின்றி காணப்படுகின்றது. (18)

# வங்கிகளின் செயற்பாடுகள் கிராம மட்டத்தில் மேம்படவேண்டும்

## பரு. மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர் தெரிவிப்பு

.(வடமராட்சி)

இன்று வங்கிகள் மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ளன. மக்களுக்கு வங்கிகளின் சேவைகள் மிக இன்றியமையாததாக மாறியுள்ளன. எனினும் கிராமிய மட்டத்தில் வங்கிகளின் செயற்பாடு மேம்பாடடைய வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.பி.கிருஸ்ணந்தனின் சேவை நலன்பாராட்டு விழாவிலே நன்றி தெரிவித்து உரையாற்றிய விழா நாயகன் கிருஸ்னானந்தன் தெரிவித்தார்.

வங்கியின் புதிய முகாமையாளர் எஸ்.வாசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விலே தொடர்ந்து உரையாற்றிய அவர் குறிப்பிட்டதாவது,

ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து அக்கிராமத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் வங்கிகளிடம் உண்டு. கிராம மக்கள் வங்கியுடன் நாணயமாக நடந்து கொண்டால் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வங்கி முகாமையாளருக்கு கிடைக்கும் கிராம மக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் கிராமிய அபிவிருத்திக்கு வழிவகுக்கும். கிராம மக்களின் தொழில் வாய்ப்புக்களையும் வளங்களையும் இனங்கண்டு அவற்றினைச் சரியான முறையில கணிப்பீடு செய்து அதற்கமைய அவர்களுக்கு வங்கியின் உதவிகள் கிடைக்கும்.

தொடர்ந்து அவர்களது இயங்குநிலையையும், வளர்ச்சிப் போக்கையும் கண்காணித்து, தொழில்களின் ஸ்திரத்தன்மையைப் பலப்படுத்த வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதற்கான பல்வேறு வசதிகள் மக்கள் வங்கியிடம் உண்டு.

கிராம மக்களும் நேர்மையுடனும், நன்றி விசுவாசத்துடனும் செயற்பட வேண்டியது முக்கியமாகும்.

மக்கள் வங்கி கடன்களை வழங்குகின்றது. கடன் பெறுவதற்காக வருமானத்தைக் கூட்டிக்காட்டும் வாடிக்கையாளர்கள் கடன் வசதிகளைப் பெற்ற பின் தங்களது தொழில் பாதிக்கப்பட்டு விட்டதாகவும் வருமானத்தை இழந்து விட்டதாகவும் கூறமுற்படுகின்றன.

இதனால் கடன் அறவீடு பாதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக வங்கி கடனை வழங்கத் தயங்குகின்றன. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கே கடன்களை வங்கி வழங்குவதாகக் கூறும் குற்றச்சாட்டிற்கும் உள்ளாக வேண்டி ஏற்படுகின்றது.

கடன்களை ஒழுங்காகவே மீளச்செலுத்தும் நாணயம் மிக்க வாடிக்கையாளர்கள் வங்கியிடமிருந்து கடன்களைப் பெற்று தங்கள் வாழ்வாதாரங்களை மேம்படுத்திக் கொள்வதையும் காண முடிகிறது என்றார். (01)

# சைவப்புலவர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடாத்தப் படும் சைவப்புலவர், இளம் சைவபுலவர் பரீட்சைக்கு விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் கொக்குவில் தபால் நிலையத்தல் 100 ரூபா காசுக்கட்டளையை சுய முகவரியிட்டு ரூபா பத்து முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் வைத்து அனுப்பவும்.

விண்ணப்பங்களை தலைவர் அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் 152, (153) காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0776132176 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம என சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் தெரிவித்துள்ளார். (10)

# வங்கிக் கிளை திறப்பு விழா

தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமம் கிளை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியில் தலைவி செல்வி. எ.நாளனி, கௌரவ விருந்தினராக வங்கியின் பணியாற்றும் பணிப்பாளர் சுமணதாச அபே குணவர்த்தன ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# யுனிசெவ் நிறுவனத்தால் சுயதொழில் உதவி வழங்கல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள 04 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்படும் சுயதொழில உதவி நன்கொடைக்கான காசோலை தலா 4 பேர் வீதம் 16 பேருக்கு 36000 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பயனாளியும் தலா 36000 ரூபா வீதம் இந்த காசோலையைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் இந்த உதவி நன்கொடைகள் வவுனியா மாவட்டத்தில் பாடசாலை செல்லும் வறிய மாணவர்கள் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் யுனிசெவ் நிறுவன நிதியில் வழங்கப்படுகின்றது.

யுனிசெவ் நிறுவனம் சென்ற 2012 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்திலுள்ள 04 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 46 பேருக்கும, 2013 ஆம் ஆண்டில் 66 பேருக்கும் சுயதொழில் நன்கொடைகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சுயதொழில் நன்கொடையைக் கொண்டு கால்நடை வளர்ப்பு, சிறுகடை, சிறு கைத்தொழில் போன்ற தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் இந்த சுயதொழில் நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

திறமையிருந்தும் வறுமை காரணமாகப் கல்வியில் இடர்களை ஏற்படுத்தும் மாணவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு இந்த நிதி நன்கொடை பெரிதும் உதவியாக உள்ளது.

சுயதொழில் கோரி விண்ணப்பித்தவர்களை சமூக சேவைகள் உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், உளவள உத்தியோகத்தர் போன்ற உத்தியோகத்தர்கள் விடயக் கலந்துரையாடல் மூலமாக தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். (90 )




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ......................................

முகவரி :- ......................................


பிறந்த ஆண்டு :- ......................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

பெற்றோர் கையொப்பம்

# குழந்தை திருமணத்தை தடுக்க புதிய சட்டம் உருவாக்கம்

## ஐ.நா. தீர்மானம்




குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்காக, ஐக்கிய நாடுகள் மன்றம் முதன்முறையாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன்மூலம் உலகின் பல நாடுகளில் குழந்தைத் திருமண நடவடிக்கைகள் பெருமளவு தடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

உலகெங்கும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1 கோடியே 50 இலட்சம் பெண் குழந்தைகள் குழந்தைத் திருமணத்தில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். மேலும் 70 கோடி பெண்கள் 18 வயதுக்கு முன்பே திருமணத்தில் ஈடுபடுத்தப் படுகிறார்கள் என்று ஐ.நா. கூறியுள்ளது.

இந்த நிலை இப்படியே நீண்டால் 2050 ஆண்டுக்குள் சுமார் 120 கோடி பெண் குழந்தைகளுக்குக் குழந்தைத் திருமணம் நடைபெற்றிருக்கும் எனவும் அது கூறியுள்ளது. இதில் நைஜர், வங்கதேசம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில்தான் அதிக அளவில் பெண் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைத் திருமணத்தை வறுமை, பாதுகாப்பின்மை மற்றும் மரபுரீதியான வழக்கங்கள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி, குழந்தைத் திருமணங்களுக்கு எதிரான சட்டத்தை இயற்றுவதற்கு வத்திகான் பிரதிநிதி ஒப்புக் கொண்டுள்ளார். எனினும், பாலியல் கல்வி மற்றும் உரிமை தொடர்பான கருத்துகளை அவர் எதிர்த்துள்ளார்.

இந்தக் கருத்துகள் எல்லாம் தொகுக்கப்பட்டு பொது சபைக் கூட்டக் குழுவினர் தீர்மானமாக நிறைவேற்ற ஒப்புக்கொண்டுள்ளனர். அடுத்த மாதத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் இவை நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

## மோடியுடன் வாழ ஆசை




இந்தியபிரதமர் மோடியுடன் சேர்ந்து வாழ ஆசைப்படுவதாக, அவரது மனைவி தெரிவித்துள்ளார். மோடிககும், யசோதபென் என்ற பெண்ணுக்கும் 1968ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அப்போது அவர்களுக்கு 20 வயது கூட ஆக வில்லை. ஓரிரு மாதங்களிலேயே மனைவியை விட்டு மோடி பிரிந்து விட்டார்.

யசோதாபென், ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டார். 62 வயதான அவர், குஜராத் மாநிலம் மெசானா மாவட்டம் ஐஸ்வர்வாடா கிராமத்தில் தன்னுடைய இருசகோதரர்களுடன் வசித்து வருகிறார்.

அவருக்கு கருப்பு பூனைப் படை பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது, இந்நிலையில், யசோதாபென்னிடம் நேற்று முன்தினம் ஒரு தனியார் செய்தி அலைவரிசை பேட்டி கண்டது. அப்போது அவர், பிரதமர் நரேந்திர மோடி தயார் என்றால், அவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன். அவர் என்னை அழைத்து செல்ல வந்தால், அவருடன் செல்லத்தயார் என்று கூறியுள்ளார்.

## அமெரிக்காவில் பனிப்புயல் 10 பேர் பலி; இயல்பு நிலை பாதிப்பு



(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், கடந்த சில நாட்களாக கடும் பனிப் புயல் வீசுகிறது. இதன் காரணமாக, இங்குள்ள பபெலோ நகரில், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது.

பெரும்பாலான இடங்களில், 7 அடி வரை பனி படிந்துள்ளது. வீடு, கார், மரம், சாலை ஆகியவை பனிப் போர்வை போர்த்தியது போல் காட்சி அளிக்கின்றன. இதனால், சாலைகளில் எதிரில் வருபவரைக்கூட பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த பனிப் புயலுக்கு இதுவரை, 10 பேர் பலியாகியுள்ளனர். இங்கு நடக்கவிருந்த கால்பந்து உள்ளிட்ட, பல்வேறு விளையாட்டு போட்டிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சாலைகளில் படிந்துள்ள பனியை அகற்றும் பணியில், 5,000இற்கும் அதிகமானோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனால், அடுத்த சில நாட்களில், பனிப் புயலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என, எச்சரிக்கை விடப்பட்டுள்ளதால், பொதுமக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

## சீனாவில் நில நடுக்கம் 4 பேர் பலி; 59 பேர் படுகாயம்



சீனாவில் உள்ள சிச்சுவான் மாகாணத்தில் கடந்த இரு தினங்களாக நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இது ரிக்டர் அளவில் 6.3 ஆக பதிவாகி உள்ளதாக சீன புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் சீனா சிச்சுவான் மகாணத்தில் உள்ள கட்டிடங்கள் அனைத்தும் குலுங்கியது. சீனாவின் சிச்சுவான் நகரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உள்நாட்டு விமான நிலையங்களும் சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தால் சுமார் 50 ஆயிரம் மக்கள் பாதிக்கபட்டுள்ளனர் 4இற்கும் மேற்பட்டவர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளதாகவும், 59 பள்ளி குழந்தைகள் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை நிலநடுக்கத்தால் இடிபாடுகளில் சிக்கி இருந்த சுமார் 35இற்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அங்கு தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும் இந்த நிலநடுக்கத்தால் 30இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைநதுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 43நாடுகளுக்கு இ-விசா வழங்குகிறது இந்தியா

புதுடில்லி,

ஜெர்மனி, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் உள்ளிட்ட 40இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருபவர்களால் பெரிதும் எதிர்பார்க்கப் பட்டு வரும் "எலக்ரோனிக் விசா" வசதி எதிர்வரும் 27-ஆம் திகதி முதல் அறிமுகமாகவுள்ளது.

43 நாடுகளுக்கான இந்த "இ-விசா" வசதியை உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங் மற்றும் சுற்றுலாத்துறை மந்திரி மகேஷ் சர்மா ஆகியோர் தொடக்கி வைக்கவுள்ளனர்.

முதற்கட்டமாக, ரஷ்யா, பிரேசில், ஜெர்மனி, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், உக்ரைன், ஜோர்தான், நோர்வே, மொரீசியஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த இ-விசா வசதி அறிமுகமாகிறது. எலக்ரோனிக் விசா வழங்குவதற்கான மென்பொருள் உட்பட அனைத்து ஏற்பாடுகளும் தயாராகிவிட்டன. இந்தியாவில் டில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, ஐதராபாத், பெங்களூர், கொச்சி, திருவனந்தபுரம் ஆகிய 9 சர்வதேச விமான நிலையங்களிலும் இந்த வசதி வழங்கப் படவுள்ளது. இந்த வசதியால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் இந்தியாவுக்கு வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

## உறவு வலுவடையும்

அமெரிக்க ஜனாதிபதியின்இந்திய பயணத்தால், இரு நாட்டு உறவு வலுவடையும் என்று, அமெரிக்க உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர். அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், டுவிட்டரில் கூறியிருப்பதாவது,

முதல் முறையாக அமெரிக்க அதிபர் ஒருவர் இந்திய குடியரசு தின விழாவில் பங்கேற்க உள்ளார். இந்தியா , அமெரிக்கா உறவை பலப்படுத்தவும், விரிவாக்கம் செய்யவும் தேவையான நடவடிக்கைகளை, நாங்கள் தொடங்கி விட்டோம். ஒபாமா, தனது இந்திய பயணத்தை எதிர் நோக்கி உள்ளார். இவ்வாறு சூசன கூறியுள்ளார்.

சிறப்பு விருந்தினராக, இந்தியாவால் அவர் அழைக்கப்பட்டு இருப்பது, இரு நாடுகளின் நட்புறவை வெளிப்படுத்துகிறது. என்று துணை பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோட்ஸ் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

## கென்யாவில் தீவிரவாத தாக்குதல் 28 பேர் சுட்டுக்கொலை

கென்யாவில், பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த முஸ்லிம் அல்லாதவர்கள் 28 பேரை, அல்-ஷபாப் பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியதாவது, சோமாலியா எல்லையையொட்டி அமைந்துள்ள மண்டேரா நகரிலிருந்து நைரோபி நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு பேருந்தை பயங்கரவாதிகள் கடத்தினர். கடத்தப்பட்டபோது அந்தப் பேருந்தில் 60 பயணிகள் இருந்தனர்.

அவர்களில் முஸ்லிம் மதத்தைப் பின்பற்றாத 28 பேரை தனியாகப் பிரித்து, பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

உயிரிழந்தவர்களில் பலர், கிறிஸ்மஸ் விடுமுறைக்காக நைரோபிக்குச் சென்ற அரசு ஊழியர்கள் என்றார் அந்த அதிகாரி. அல் கொய்தாவோடு தொடர்புடைய அல்-ஷபாப், கென்யாவில் அடிக்கடி பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

## தி.மு.காவை அழிக்கமுடியாது



லோக்சபா தேர்தலில் தி.மு.க., தோற்கவில்லை எனவும், தமிழக மக்கள் தான் தோல்வியடைந்துள்ளதாக தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் கூறினார்.

மதுரையில், மாநகர் மாவட்ட தி.மு.க., உறுப்பினர்கள் மத்தியில் பேசிய ஸ்டாலின், அ.தி.மு.க., அரசில் பெரு முதலாளிகள் தொழில் தொடங்க முன்வரவில்லை. 3 ஆண்டுகளில் அ.தி.மு.க., ஆட்சியில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படவில்லை. லோக்சபா தேர்தலில் தி.மு.க., தோற்கவில்லை. தமிழக மக்கள் தான் தோல்வியடைந்துள்ளனர். பெண் சுய உதவி குழுக்களுக்கு உதவித் தொகை முறையாக வருவதில்லை. தி.மு.க.,வை எந்தவொரு தீயசக்தியாலும் வீழ்த்த முடியாது என அவர் கூறினார்

## சட்ட விரோத குடியிருப்பாளர்கள் குறித்து புதிய நடைமுறைக்கு கண்டனம்

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்போர் தொடர்பில் ஜனாதிபதி பராக் ஒபாமா புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தார். இந்த புதிய நடைமுறைக்கு அமெரிக்க குடியரசு கட்சி கண்டனத்தை வெளியிட்டுள்ளது.


அமெரிக்காவில் உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக குடியேறியவர்களில் 47 இலட்சம் பேருக்கு சட்டபூர்வ அந்தஸ்து அளிக்கப்படும் என்று ஜனாதிபதி ஒபாமா கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

இது குறித்து அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகரும், குடியரசு கட்சியைச் சேர்ந்தவருமான போஹ்னர் கருத்து வெளியிடுகையில், சட்ட விரோதமாக குடியேறிவர்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து அளிப்பதென்பது இரு கட்சிகளும் சேர்ந்து எடுக்கக்கூடிய முடிவுகளை பயனற்ற தாக்கும் செயலாகும்.

இந்த விடயத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வராமல் ஒபாமா தனது அதிகார வரம்பை மீறியிருக்கிறார். இது எதிர்காலத்தில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அமையும். ஒபாமாவின் இந்த அறிவிப்பை எதிர்த்து குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் நிச்சயமாக போராடுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

# மக்களின் கையேந்தும் நிலைமைக்கு தவறான அரசியல் தலைமையே காரணம்

## - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு -





(யாழ்ப்பாணம்)

கடந்தகால தவறான அரசியல் தலைமைகளினாலேயே எமது மக்கள் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார்களென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைசசரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற புகையிரதத் திணைகள ஊழியர்களுக்கு நியமனப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணக்க அரசியல் ஊடாக எமது மக்களுக்கு இவ்வாறான வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறும் நிலையில் அதனூடாக அவர்களது வாழ்வாதாரத்தைப் பலப்படுத்தவும் மேம்படுத்தவும் முடியும்.

ஆனால், கடந்தகாலங்களில் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்கள், வாய்ப்புகளை தமிழ் அரசியல்வாதிகள் தவறாகப் பயன்படுத்தியதன் காரணமாக எமது மக்கள் பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

அதுமட்டுமன்றி, எமது மக்களைக் கையேந்தும் நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் கடந்தகால தவறான அரசியல் தலைமைகளே என்று தெரிவித்த அமைச்சர், நாம் அந்த நிலையை மாற்றி, எமது மக்களை சொந்தக் கால்களில் நிற்க வைப்பதே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறு கிடைக்கப் பெறுகின்ற வாய்ப்புகளுக்கு ஊடாக நியமனம் கிடைக்கப் பெறுகின்றவர்களும் அவர்கள் சார்ந்து வாழும் சமூகத்தினரும் எதிர்கால வாழ்வை வளம்படுத்துவதுடன், பலப்படுத்தி முன்னேற்றம் காண முடியும்.

இந்நிலையில், தமக்காகச் சேவை செய்பவர்களையும், உழைப்பவர்களையும் மக்கள் சரியான முறையில் இனங்கண்டு, அவர்களுக்குத் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

அந்தவகையில், எமது மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தியே நாம் திட்டங்களை வகுத்து அவற்றை செயற்படுத்தி வருகின்றோம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) உடனிருந்தார்.

இதில், புகையிரதத் திணைக்களத்தைச் சேர்ந்த 54 பேருக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# யாழ். பல்கலையை சூழ படையினர் குவிக்கப்பட்டனரா?

## முற்றாக மறுக்கிறது இராணுவம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை சூழவுள்ள பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் தகவல்களில் உண்மை எதுவுமில்லையென இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளதாவது,

புலி உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலான மாவீரர் தின அனுட்டானங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

புலிப் போராளிகளை புகழ்ந்து பாராட்டும் வகையிலான நிகழ்வுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை.

புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏதாவது ஓர் வகையில் பயங்கரவாத நடவடிக்கைகளை புகழ்ந்து பாராட்டுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

எவ்வாறெனினும், வடக்கில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் வெளியான தகவல்களில் உண்மையில்லை.

பல்கலைக்கழக விவகாரங்களில் படையினர் எவ்வித தலையீடுகளையும் மேற்கொள்வதில்லை.

பல்கலைக்கழகங்களை திறப்பதுவும் மூடுவதும் உயர்கல்வி அமைச்சின் தீர்மானமே தவிர பாதுகாப்பு தரப்பிற்கு தொடர்பு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

### தபால்மூல...

விண்ணப்பங்களை கையளிப்பதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் தமது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும் அவதானித்துக் கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தபால் வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தல் 2014 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பிற்கு அமைய நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் தகுதிபெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் டிசம்பர் மாதம் எட்டாம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை தேர்தல்கள் செயலக கேட்போர் கூடத்தில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தினத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11.30 வரை வேட்பாளர்கள் தொடர்பான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய முடியும் என்வும் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

### பாப்பரசரின்...

ஊடகப் பேச்சாளர் சிறில் காமினி தெரிவித்துள்ளார்.

பாப்பரசரின் இலங்கை விஜயம் திட்டமிட்டபடி நடக்க இது முக்கியமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

### வலி. தென்மேற்கு...

பதில் தவிசாளரானார். பின்னர் கடந்த மே மாதம் தவிசாளராகப் பொறுப்பேற்றார்.

சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணம், கொழும்பு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட இவர் பின்னர் தவிசாளர் பொறுப்பை உப தவிசாளர் எஸ்.மகேந்திரனிடம் ஒப்படைத்தார். அவரிடம் இருந்து மீண்டும் தவிசாளர் பொறுப்பை ஏற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மைத்திரிபாலவின்...

கலந்துரையாடினர். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் நீதியாக நடந்துகொள்ள வேண்டும். எதிர்த்தரப்பினரை கீழ்த்தரமாக விமர்சிக்கும் பண்பை விட்டுவிட வேண்டும். ஒரு சிறந்த வழிமுறையின் கீழ் வெற்றி பெற்று இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் எனவும் தேரர் மேலும் கருத்துக் கூறினார்.

# வைத்தியசாலை வீதி புனரமைப்பு



மண்டைதீவு வைத்தியசாலை வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டுவருகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதியின் ஒதுக்கீட்டில் இருந்து இந்த வீதியானது புனரமைக்கப்பட்டு தார் ஊற்றி புனரமைக்கப்படுகிறது.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்துவந்த இந்த வீதியானது மண்டைதீவு வைத்தியசாலை இயங்கிவரும் சூழலில் நோயாளர்கள் சிரமமின்றி வைத்தியசாலைக்குச் சென்றுவரக்கூடிய விதத்தில் புனரமைக்கப்பட்டுவருகிறது. (பா)

# மைத்திரிக்கு ஆதரவு ஏன்? விளக்குகிறார் சஜித் எம்.பி.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஒன்று ஏற்பட வேண்டும் என்ற ஆசையினால் விருப்பமின்றியேனும் பொது ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு வழங்க தீர்மானித்ததாக அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

குருணாகலில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தலைவர் ரணில் வ்க்ரமசிங்க அல்லது நான் போட்டியிட வேண்டும் என்ற பெரும் விருப்பம் இருந்தது.

எனினும் கட்சியின் பொது தீர்மானத்திற்கு தலைவணங்கி அடுத்து ஆட்சியமைக்கும் புதிய அரசாங்கத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்படுவதை காண்பதற்காக மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் சஜித் கூறியுள்ளார்.

### எத்தகைய...

இருக்கிறது. அனைவரும் அந்த சுதந்திரத்தை அனுபவிக்க முடி யும். அரசாங்கத்திலிருந்து வெளி யேறியவர்களுக்கு நான் ஒரு விடயத்தை கூறுகிறேன். அவர்கள் பற்றிய கோப்புகள் என்னிடம் உள்ளன. ஆனால் அவற்றை நான் பயன்படுத்த மாட்டேன். நான் அப்படியான நபர் அல்ல எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

### தேர்தல்...

என்பது தொடர்பில் இது வரை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நேற்று நடைபெற்ற கட்சியின் விசேட கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டது.

எவ்வாறாயினும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களினால் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டதன் பின்னர் யாருக்கு ஆதரவை வழங்குவது என்பது தொடர்பாக இறுதி தீர்மானத்தை மேற்கொள்வதற்கு இதன்போது முடிவெடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

### 14 இந்திய...

இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் இவர்கள் அனைவரும் நெடுந்தீவுக் கடற்படையினரால் நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டனர். இவர்களது 3 படகுகளும் கைப்பற்றப்பட்டன. கைதான மீனவர்கள் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது இவர்கள் அனைவரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இவர்களில் 14 வயதுடைய சிறுவன் ஒருவனும் அடங்குகிறான் என்பது குறிப்பிடத்தக்கது. (25)

### நிறைவேற்று...

அந்தப் பதவியிலிருந்து நீக்கினார். எமது கட்சியை பிளவுபடுத்துவதற்கு முயன்றார். அது கைகூடவில்லை. ஏனைய அனைத்து கட்சிகளையும் பிளவுபடுத்தினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கு தமக்கு எவரும் உதவவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். தோல்வியைக் கண்டே இவ்வாறு கருத்துக்களை கூறுகின்றார். நான் சவால் விடுக்கின்றேன். 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஆதரவு வழங்கும் என்பதை நான் அன்று நாடாளுமன்றத்தில் கூறியிருந்தேன். நானும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றேன்.

இன்று காலை அமைச்சரவையை கூட்டுங்கள். இதனை அவசர சட்ட மூலமாக உறுதிப்படுத்தி நீதிமன்றத்திற்கு அனுப்பிவையுங்கள். வேண்டுமாயின் திங்கட்கிழமை (இன்று) அவசரமாக நாடாளுமன்றத்தை கூட்டுங்கள். விவாதம் ஒன்று இல்லாமல் அதனை நிறைவேற்றித் தருவதற்கு நாங்கள் தயார். தற்போது சந்தர்ப்பம் உங்கள் கையில் உள்ளது. நான் அதனை பகிரங்கமாக கூறுகின்றேன் எனத் தெரிவித்தார்.

# 350 பொலிஸ் அதிகாரிகளுக்கு தேர்தல் அறிவிப்புடன் இடமாற்றம்

## பவ்ரல் அமைப்பு விசனம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புச் செய்வதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னரும் அறிவிப்புச் செய்து 24 மணித்தியாலத்துக்குள்ளும் 350 பொலிஸ அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் கண்காணிப்புக்கான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபருக்கு நேரடியாகத் தகவல் பெற்றுத் தரும் விசேட பொலிஸ் செயலகத்தின் அதிகாரிகள் 350 பேரே இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர்ந்த மேலும் நான்கு பொலிஸ் அதிகாரிகள் கடந்த இரு நாட்களில் மாற்றப்பட்டுள்ளதாகவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படவிருந்த 10 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபரின் உத்தரவிற்கு அமைய இந்த இடமாற்றங்கள் ஒத்தி வைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய குறித்த இடமாற்றங்கள் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் தொடக்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வரையான பதவிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இந்த இடமாற்றங்கள் வழங்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பாரபட்சமற்ற செயற்பாடு பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் பாரபட்சமற்ற முன்றயில் செயற்படுமாறு, அனைத்து பிரதேச செயலர்களுக்கும் பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை எழுத்து மூலம் அனுப்பி வைத்துள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். தேர்தலில் பிரதேச செயலர்களுக்கு பெரும் பொறுப்பு வழங்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் தேர்தல் நடவடிக்கைகளின்போது, பிரதேச செயலர்கள் நேர்மையாகவும் நடுநிலையாகவும் செயற்படுவது அவசியம் எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

## ஐ.தே.க. முக்கிய உறுப்பினர் அரசுடன் இணைவார்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் இணைவார் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

குறித்த உறுப்பினர் அரசாங்கத் தரப்பினருடன் பேச்சு நடத்தியிருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்ரிபால சிறிசேனவை தன்னுடன் இணைத்து கட்சித்தாவலுக்கு வழிவகுத்தது.

மைத்திரிபாலவுடன் ராஜித சேனாரட்ண, துமிந்த திஸநாயக்க, எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன போன்றோர் எதிர்க்கட்சி வரிசைக்குத் தாவினர். இதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் மிக உயர் மட்ட உறுப்பினர் ஒருவர் பக்கம் மாறுவார் என தெரிவிக்கப்படுகின்றது.

# பட்ஜெட் வாக்களிப்பில் பங்கேற்காது ஹெல உறுமய

2015 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில் அந்த வாக்களிப்பில் கலந்து கொள்ளாதிருக்க ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

அதற்கமைய வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரதன தேரர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் வாக்களிப்பில் கலந்துகொள்ளமாட்டார்கள் என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ண சிங்க தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக்கட்சி உறுப்பினர் எவரும் கட்சியை காட்டிக்கொடுக்கார்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் கட்சியை காட்டிக்கொடுப்பதற்கோ, வெளிச்செல்வதற்கோ முயற்சிக்க மாட்டார்கள் என தாம் உறுதியளிப்பதாக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மைத்திரிபால சிறிசேன கட்சியைக் காட்டிக் கொடுத்துள்ளது மட்டுமல்ல ரணில் விக்ரமசிங்கவை அதிகாரத்திற்கு கொண்டு வருவதில் முக்கிய நபராகவும் மாறியுள்ளதாக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி சுட்டிக் காட்டினார்.

வெளிநாட்டு சக்திகளின் தேவைப்பாடுகளுக்கு எமது கட்சியில் இருந்த முன்னாள் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன பகடைக் காயாக மாறியுள்ளார் என்பதையிட்டு நாங்கள் வருந்துகிறோம்.

மேலும் இம்முறையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 25 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பெரும் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் இடம்பெற்றது அரசியல் சதிகள் எனவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக போராட தாம் உள்ளிட்ட குழுவினர் தயாராக இருப்பதாகவும் இங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன கூறினார்.

# மைத்திரி மீது கோபமில்லை அமைச்சர் நிமால் அறிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுச் சென்ற மைத்திரிபால சிறிசேனவுடன் தனக்கு தனிப்பட்ட ரீதியில் எந்த கோபதாபங்களும் இல்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

எவர் கட்சியை விட்டுச் சென்றாலும் தான் எப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுச் செல்லப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை எதிர்க்கட்சிகள் மேற்குலக தூதரகங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைய செயற்படுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

# ஜனாதிபதி மகிந்தவிற்கே ஆதரவு முடிவில் மாற்றம் எதுவுமில்லை

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் முடிவில் எதுவித மாற்றமுமில்லை. இருந்தும் அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கப்போவதாக நாட்டுக்கு அறிவிக்க வேண்டுமென ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இடதுசாரி கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகியன தற்போதையநிலையிலும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கப் போவதாக தெரிவித்துள்ளன.

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரன இது தொடர்பாக தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவதில் எதுவித மாற்றமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

# வீட்டிலிருந்தே பொதிகளை அனுப்பலாம் வடக்கில் விரிவாகியது அஞ்சல்சேவை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் அஞ்சல் திணைக்களம் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. அத்துடன் பொதி பரிமாற்ற சேவையையும் தொடங்கியுள்ளது. இதனைப் பயன்படுத்த விரும்புவோர் வீட்டிலிருந்தவாறே தபால் ஊழியர்கள் ஊடாக பொதிகளை அனுப்பி வைக்க முடியும்.

இதற்காக பொதிப் பரிமாற்றக் கட்டணம் மட்டுமே அறவிடப்படுமென வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் ந. இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இதன்படி கட்டணமாக 250 கிராமிலிருந்து 500 கிராம் வரை 165 ரூபாவும், 500 கிராமிலிருந்து 1 கிலோ கிராமிற்கு 195 ரூபாவும், 9 கிலோ கிராம் - 10 கிலோகிராம் 1425 ரூபாவும், 19 - 20 கிலோவிற்கு 2925 ரூபாவும், அறவிடப்படும்.

மேலும் பொருட்களின் நிறைக்கு ஏற்ப, கட்டணங்கள் மாறுபடும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் நன்மை கருதி அஞ்சல் திணைக்கள தகவல் தொழில்நுட்ப பிரிவு கட்டணங்களை இணையத்தளம் ஊடாக அனுப்பி வைப்பதற்கான வலையமைப்பை அனைத்து தபால் காரியாலயங்களிலும் அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளது.

யாழ் - கொழும்பு புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்துக்கு வெகு விரைவில் தபால்கள், பொதிகளை விநியோகிக்கக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# பண்டிகைக்காலத்தை முன்னிட்டு டிசம்பரில் விசேட சுற்றிவளைப்பு

பண்யடிகைக் காலத்தை முன்னிட்டு நாடு பூராகவும் வர்த்தக நிலையங்களை குறிவைத்து விஷேட சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ள நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மாதம் முழுவதும் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபைத் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பதுக்குதல் போன்ற விடயங்களில் விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது.

மேலும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் காலாவதி திகதியை மாற்றியமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய வர்த்தக நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் ரூமி மர்சூக் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே.க.வைச்சேர்ந்த பலர் அரசுடன் இணைவதில் ஆர்வம்

## பிரதியமைச்சர் ரோகண கூறுகிறார்

(கொழும்பு)

எவரும் அரசாங்கத்தில் இருந்து வெளியேற மாட்டார்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியைச்சேர்ந்த சிலர் அரசாங்கத்தில் இணைய உள்ளதாகவும் பிரதியமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைக கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சந்திரிக்காவின் சூழ்ச்சி காரணமாகவே மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் அரசாங்கத்தில் இருந்து விலகினர்.

மைத்திரிபால சிறிசேன அதில் சிக்கிக்கொண்டார். அடுத்த சில தினங்களில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் அரசாங்கத்தில் இணைய உள்ளனர். மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறமாட்டார்கள்.

உள்ளூராட்சி சபைகளை சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள உள்ளனர் எனவும் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசாங்கத்தில் இருந்து விலகிக் செல்பவர்கள் விலகிச்செல்லட்டும் என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இருக்க முடியாதவர்கள் சென்றால்தான் எமக்கு பலம் கிடைக்கும். 26 பேர் குறைந்து போனாலும் அரசாங்கத்திடம் பலர் உள்ளனர். போகிறேன் என்று கூறி போகிறவர்கள் இறுதியில் குளத்தில்தான் குதிக்க வேண்டும் என பிரதமர் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.